செய்யாமடக் கோவை.

பகம்.1.

Suitable for Middle Schools.

POETICAL SELECTIONS

PART I.

Pandit P. C. P. NATHAN,

AUTHOR OF ARPUTHAKANAIYALI, YAGYAVALKIYAM, NEETHISARATHIRATTU & Etc.

MADURA,

P. N. CHIDAMBARA MUDALIAR & Co.,

PRINTERS, PUBLISHERS & BOOK-SELLERS.

1919. [8 As.

உ

செய்யுட்பாடக்கோவை

முதற்பாகம்.

மதுரை
ஸௌராஷ்டிர ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,
அற்புதக்கணையாழி, நீதிசாரத்திரட்டு, யாக்ஞவல்கியம்
முதலிய நூல் ஆசிரியரும்
பாண்டியநேசன் பத்திராதிபருமாகிய
திருத்தகு. பு. சிதம்பரபுன்னைவனநாத முதலியார்
தொகுத்தது.

மதுரை புத்தக வியாபாரிகள்
P. N. சிதம்பரமுதலியார் & Co.,
வெளியிட்டது.

 1919. விலை அணா 8.

மதுரை ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலை.

உ

குமரகுருபரன் துணை.

புறவுரை.

தமிழ்நலம் உணர்வீர்!

'செய்யுட்பாடக்கோவை' என்ற பெயருடன் வெளிப்படும் இது; லட்சுமிராம் கோவையின் ஐந்தாவது மணியாகும். இம்முதற்பாகம், ஆங்கில மிடில்ஸ்கூல்களில் பயிலும் மாணவர்கள் தமிழ்ச்செய்யுளமுதை எளிதில் விருப்புடன் பெற்றின்புறுமுறையில், தமிழ்ச்செய்யுள் நூல்களே தமிழ்மொழி மேம்பாட்டைப் பெரிதும் புலப்படுத்துவதான காலம் மாற, வசனநூல்களே மாணவராலும் தமிழ்நலம் உணர முற்படுபவராலும் பெரிதும் வாசிக்கப்பெற்றுவரும் இக்காலத்தியலைத் தழுவி, கடினசந்தி களைந்து பதப்பிரிவுடன் தெளிவாகப் பதிப்பிக்கப்பெற்றுளது.

மிடில் ஸ்கூல் வகுப்புத் தமிழ்ப்பாட புத்தகங்களில் வகுப்புக்குத்தக இரண்டொரு செய்யுள் நூல்களினின்றுமே செய்யுள்கள் பொறுக்கிச் சேர்க்கப்பட்டிருப்பதினிமித்தம், அப்புத்தகங்களை ஒருவருஷத்திற்குமேல் மறு வருஷமும் படிக்கநேரும் பிள்ளைகள் அச்செய்யுட்களை மீண்டும் படிக்க வெறுப்படையக் கூடியவர்களாகிறார்கள். இவ்வெறுப்பு ஏற்படாது காக்கவும், ஒருவகுப்பு மாணவனே பல நூற்செய்யுட்களையும், தான் பயிலும் அவ்வகுப்பிலேயே படிக்கும்படி செய்யவும், ஏற்றவாறு பல அரிய நூல்களினின்றும் மாணவர்க்கிசைந்த செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூல், மிடில் ஸ்கூல் வகுப்புகட்குப் பயன்படுமாறு புதுமுறையில் தொகுக்கப்பெற்று, ஒவ்வொரு செய்யுளின் கருத்தும் தலைப்பில் சுருக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதனைத் துரைத்தனத்தார் செய்யுட்பாடப்புத்தகமாக அங்கீகரிக்கவும், கலாசாலை அதிகாரிகள் பாடப்புத்தகமாகக்கொண்டு என்னை ஆதரிக்கவும், அன்புடன் வேண்டுகின்றனன்.

நாதவிலாஸம்
4—8—1919

பண்டிட் P. C. P. நாதன்

பொருள் அடக்கம்.

உ

குமரகுருபரன் துணை.

செய்யுட்பாடக்கோவை

முதற்பாகம்.

ஔவையார் அருளிய
மூதுரை.

நல்லவரால் ஆகும் நன்மைகள்.

1 நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே,—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

நல்லவருக்குச் செய்த உபகாரத்தன்மை.

2 நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்,
கல்மேல் எழுத்துப்போல் காணுமே.—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்,
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

நல்லார்க்குச் செய்த உதவி பயன்தருவதே.

3 நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா.—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதல் ஆல்.

மூடருக்குப்புரிந்த உபகாரம் தீமை விளைக்கும்.

4 வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்(கு) ஆகாரம் ஆனாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்,
கல்லின்மேல் இட்ட கலம்.

குணம் மாறாதவை.

5 அட்டாலும் பால்சுவையிற் குன்றா(து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்.
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

வல்லவருக்கும் துணைவலி வேண்டும்.

6 பண்டு முளைப்ப(து) அரிசியே ஆனாலும்,
விண்டுமி போனால் முளையாதாம்.—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும், ஆகா(து); அளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

உண்மை உறவினர் இயல்பு.

7 அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்.—அக்குளத்தில்
கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு

இனம் இனத்தையே நாடும்.

8 நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்,
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர். முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

வஞ்சகர் இயல்பு.

9 நஞ்சுடைமை தானறிந்து, நாகம் கரந்துறையும்.
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர். கரவார்,
கரவிலா நெஞ்சத் தவர்.

கல்வியறிவில்லாதவன் கடையானவன்.

10 கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்;—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்,நல் மரம்.

போலிக்கல்வி புகழ்அழிக்கும்.

11 கானம் மயிலாடக் கண்டிருந்த வான்கோழி,
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினால் போலுமே,
கல்லாதான் கற்ற கவி.

வடிவத்தால் ஒன்றை இகழ்தல்கூடாது.

12 மடல்பெரிது தாழை, மகிழினிது கந்தம்,
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா,—கடல்பெரிது
மண்நீரும் ஆகா(து). அதனருகே சிற்றூறல்,
உண்நீரும் ஆகி விடும்.

ஒருவனைத்தோற்றத்தால்மதித்து வெல்லக் கருதலாகாது.

13 அடக்கம் உடையார் அறிவிலரென்(று) எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா.—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும்,
வாடி இருக்குமாம் கொக்கு.

கற்றவன் சிறப்பு.

14 மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்,
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்.—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை. கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

கூடுங்காலத்தில் யாவும்கைகூடும்.

15 அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்,
பருவத்தால் அன்றிப் பழா.

ஊழினளவே அநுபவமுண்டாம்.

16 ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில்
நாழி, முகவாது நானாழி—தோழி!
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.

ஒவ்வொன்றின் பெருக்கமும் ஒவ்வோரளவைப் பொறுத்ததாம்.

17 நீரளவே ஆகுமாம் நீராம்பல், தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு,—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்;
குலத்தளவே ஆகும் குணம்.

மானமுடையவர் செய்கை.

18 உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?—கற்றூண்
பிளந்திறுவ(து) அல்லால், பெரும்பாரம் தாங்கில்
தளர்ந்து வளையுமோ? தான்.

நல்லவர் ஒருவரால் பல்லோர்பயனுறல்.

19 நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்.—தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரே அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை.

அறிஞர் அருஞ்செயல்

20 சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்.—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

கோபிகள் இயல்பு

21 கற்பிளவோ(டு) ஒப்பர் கயவர்; கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ(டு) ஒப்பாரும் போல்வாரே,—விற்பிடித்
நீர்கிழிய எய்த வடுப்போல, மாறுமே [த்து
சீரொழுகு சான்றோர் சினம்.

உதவுவானே உற்ற உறவினன்.

22 உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா,
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்.
அம்மருந்து போல்வாரும் உண்டு.

தோற்றமும் கேடும்.

23 மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ(து) அவளோடுஉர் ஆகும். அவள்பிரிந்து
போம்போ(து) அவளோடும் போம்.

கூற்றமானவை.

24 கல்லாத மாந்தர்க்(கு) கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க்(கு) அறம்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம். கூற்றமே
இல்லிற்(கு) இசைந்தொழுகாப் பெண்.

கேடினும் சீலம் கெடாதவர்.

25 சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா(து) ஆதலால்,—தந்தம்
தனம் சிறியர்ஆயினும் தார்வேந்தர் கேட்டால்,
மனம்சிறியர் ஆவரோ? மற்று.

ஔவையார் அருளிச்செய்த

நல்வழி.

நன்மைக்கு இன்பமும், தீமைக்குத் துன்பமும் ஆகும்.

1 புண்ணியம்ஆம், பாவம்போம்; போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை. எச்சமயத் தோர்சொல்லும்;
தீதொழிய நன்மை செயல்.

ஈகையாலே சாதீயிரண்டாகும்.

2 சாதி இரண்டொழிய வேறில்லை. சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்.
பட்டாங்கில் உள்ள படி.

கரவாது அளிப்பவரே கண்ணிய சுற்றத்தார்.

3 மரம்பழுத்தால் வெளவாலை வாஎன்று கூவி,
இரந்தழைப்பார் யாவருமங்(கு) இல்லை.—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா(து) அளிப்பரேல்,
உற்றார் உலகத் தவர்.

செட்டற்றவன் சீர்கேடுவது.

4 ஆன முதலில் அதிகம் செலவானால்,
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்ப்பிறப்பும் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

பசியாற் பறந்துபோவன.

5 மானம், குலம்கல்வி வண்மை அறிவுடைமை,
தானம், தவம்உயர்ச்சி, தாளாண்மை,—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல், பத்தும்;
பசிவந் திடப்பறந்து போம்.

பிறமாதரை விரும்புதலால் வரும்கேடுகள்.

6 நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில்
கொண்டகரு அளிக்கும்கொள்கைபோல்,-ஒண்டொடீ!
போதம், தனம்கல்வி பொன்றவரும் காலம்,அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்.

பாரபக்ஷமாய்ப் பேசுபவர் முற்றிலும் கெடுவர்.

7 வேதாளம் சேருமே, வெள்ளெருக்குப் பூக்குமே,
பாதாள மூலி படருமே,—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே; சேடன் குடிபுகுமே;
மன்(று)ஓரம் சொன்னார் மனை.

பாழாவன.

8 நீறில்லா நெற்றிபாழ். நெய்யில்லா உண்டிபாழ்.
ஆறில்லா ஊருக்(கு) அழகுபாழ்.—மாறுஇல்
உடற்பிறப்(பு) இல்லா உடம்புபாழ் பாழே;
மடக்கொடி இல்லா மனை.

வன்சொலினும் மென்சொலே வலியுடையது.

9 வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது.—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை; பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

செல்வமுற்றேன் சிறப்பு.

10 கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்(று) உண்டாயின்
எல்லாரும் சென்றங்(கு) எதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்(று), ஈன்றெடுத்த தாய்
செல்லா(து) அவன்வாயிற் சொல். [வேண்டாள்.

அறிஞர்க்கும் அறிவிலார்க்கும் வேற்றுமை.

11 பூவாதே காய்க்கும் மரமுமுள, மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே.—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்றா(து) உணர்வு.

ஆகுங்காலத்துயாவும் எளிதில் ஆகும்.

12 எண்ணி, ஒருகருமம் யார்க்குஞ்செய் ஒண்ணாது.
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான்
மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே,
ஆங்காலம் ஆகும் அவர்க்கு.

அமைவன தவறாது அமையும்.

13 வருந்தி அழைத்தாலும் வாராத, வாரா.
பொருந்துவன, போமின்என்றால் போகா.—இருந்(து)
நெஞ்சம் புண்ணாக நெடும்தூரம் தாம்நினைந்து,[ஏங்கி
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

திருமகள் அருளால் சிறப்பன.

14 நீரும், நிழலும், நிலம்பொதியும் நெற்கட்டும்,
பேரும், புகழும், பெருவாழ்வும்,—ஊரும்,
வரும்திருவும், வாழ்நாளும், வஞ்சம்இலார்க்(கு) என்
தரும்சிவந்த தாமரையாள் தான். [றும்

வீண்எண்ணம் வெந்துயர் விளைக்கும்.

15 உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம்,
எண்பது கோடிநினைந்(து) எண்ணுவன;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை; மண்ணின் கலம்போலச்
சாம்துணையும் சஞ்சலமே தான்.

வயிற்றுப் பிழைப்புக்கான பலதொழில்.

16 சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்கடந்தும்,
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்,—போவிப்பம்
பாழின் உடம்பை, வயிற்றின் கொடுமையால்,
நாழி அரிசிக்கே நாம்.

பணத்தைப் பயன்படுத்தல் அவசியம்.

17 பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு), ஆரே அநுபவிப்பார்?
பாவிகாள் அந்தப் பணம்.

யாசகத்தினும் இழிவானது மூகஸ்துதி.

18 பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்,
இச்சைபல சொல்லி இடித்துண்கை—சிச்சீ!
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து),
உயிர்விடுகை சால உறும்.

பயிர்த்தொழிற் பெருமை.

19 ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும், விழுமன்றே?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்;
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

குடிப்பிறந்தார் கொடுப்பன கொடாமலிரார்.

20 ஆற்றுப் பெருக்கற்(று) அடிசுடும்அந் நாளும்அவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்.—ஏற்றவர்க்கு, (று),
நல்ல குடிப்பிறந்தார்; நல்கூர்ந்தார் ஆனாலும்;
இல்லையென மாட்டார் இசைந்து.

பணம்உள்ளபொழுதே பலதருமமும் செய்க.

21 ஆறிடும் மேடும், மடுவும்போல் ஆம்செல்வம்.
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்!—சோறிடும்,
தண்ணீரும் வாரும், தருமமே சார்பாக,
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

அற்புத மானவை.

22 தண்ணீர் நிலநலத்தால், தக்கோர் குணம்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்,—பெண்ணீர்மை,
கற்பழியா ஆற்றல்; கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

மரியாதையே மாறாத பொருள்.

23 ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்.—தேட்டம்,
மரியாதை காணும், மகிதலத்தீர்! கேள்மின்,
தரியாது காணும் தனம்.

இதனின் இதுநன்று எனல்.

24 இழுக்குடைய பாட்டிற்(கு); இசைநன்று. சாலும்
ஒழுக்கம்; உயர்குலத்தின் நன்று.—வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய். பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி.

ஒரேபொருளை உலகுணர்த்தும் நூல்கள்.

25 தேவர் குறளும், திருநால் மறைமுடிவும்,
மூவர் தமிழும், முனிமொழியும்,—கோவை,
திருவா சகமும், திருமூலர் சொல்லும்;
ஒருவா சகமென்(று) உணர்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நன்னெறி.

உபசார வார்த்தை யெதிர்பாராதே உதவுவர் பெரியோர்.

1 என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்.-துன்றுசுவை
பூவில் பொலிகுழலாய்! பூங்கை புகழ்வோ?
நாவிற்(கு) உதவும் நயந்து.

நண்பர் வன்சொல் பகைவர் இன்சொலினும் இனிதாம்.

2 மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி(து)ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க.—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ? நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ? விருப்பு.

தருமஞ்செய்யாதவர்தனம் தருமஞ்செய்கின்றவருக்காம்.

3 பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு,
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும்.—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

பிரிந்து சேரினும் முன்வலியற்றதாகும்.

4 நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்,
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்.-பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும், திண்மைநிலை போம்.

காதலன் காதலியிருவரும் ஒற்றுமையுடனேயே ஒருகாரியம் செய்யவேண்டும்.

5 காதல் மனையாளும், காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே.—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய்! நோக்கல்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். [தான்

கல்விப்பேற்றில் கருவங்காட்டலாகாது.

6 கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடல்ஏ(று) அனையசெருக்(கு) ஆழ்த்தி—விடலே,
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்.

சினத்தை ஆரம்பத்திலேயே அடக்கல் அழகு.

7 உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்,
கொள்ளும் குணமே குணமென்க.—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு.

வலியனுதவி பெற்ற மெலியவனும் வலியவனே.

8 மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்;
வலியோர் தமைத்தாம் மருவில்,—பலிஏல்
கடவுள் அவிர்சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்சிறைப் புள்ளரசைப் பார்த்து.

பெரியோர் பிறர் குறை போக்குவதிலேயே பெருங்கருத்துடையவர்

9 தங்குறைதீர்(வு) உள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்.—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து), உலகின்
நிறையிருளை நீக்கும்மேல் நின்று.

நல்லறிஞர் தமது பெருஞ்சம்பத்தாற் செருக்கடையார்

10 தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று,
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண்(டு) ஊதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

கொடையாளி மகனும் கொடையாளியே.

11 எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து); என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

இன்சொல்லே இன்பமளிப்பது.

12 இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்,
வன்சொலால் என்றும் மகிழாதே.—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால், தண்ண
கதிர்வரவால் பொங்கும் கடல். [ன்

நல்லோர் வருகை நலப்பயக்கும்.

13 நல்லோர் வரவான் நகைமுகங்கொண்(டு) இன்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர்
திருந்தும் தளிர்காட்டித், தென்றல்வரத் தேமா,
வருந்தும் சுழல்கால் வர.

பெரியவர், பிறர்துயருறச் சகியார்.

14 பெரியவர்தம்நோய்போல் பிறர்நோய்கண்(டு),உள்ளம்
எரியின் இழுதாவர் என்க.—தெரியிழாய்!
மண்டு பிணியால், வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

படியாதவர் பெருமை படித்தவர்முன் அழியும்

15 எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்,
எழுத்தறிவார்க் காணின் இலையாம்.—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை.

அறிவாலன்றிப் பிறப்பாற் சிறப்பில்லை.

16 ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க.—நீக்கு
பவரார்? அரவின் பருமணிகண்(டு), என்றும்
கவரார் கடலின் கடு.

கீழோர் ஒன்றின்குணம் விட்டுக் குற்றமே பார்ப்பார்

17 உண்டு குணமிங்(கு) ஒருவர்க்(கு) எனினும்கீழ்,
கொண்டு புகல்வதவர் குற்றமே.—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்
காக்கை விரும்பும் கனி. றோ?

உருவத்தாலேயே ஒருவர் சிறப்பை மதிக்கலாகாது.

18 உடலின் சிறுமைகண்(டு) ஒண்புலவர் கல்விக்
கடலின்பெருமை கடவார்.—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ? காணும் கதிரொளிதான்
மண்ணள(வு) ஆயிற்றோ? விளம்பு.

கற்றவர், பிரதியுபகாரம் கருதாது உதவி செய்வர்.

19 கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர்.—அம்மா!
முளைக்கும் எயிறு; முதிர்சுவைநா விற்கு,
விளைக்கும் வலியன தாம் மென்று.

பேரறிவாளர் கோபமுறினும் கொடுப்பன கொடுப்பர்.

20 முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான். எட்டிபழுத்(து)
ஆயினும் ஆமோ? அறை.

கூற்றுவருமுன் கூடிய அறஞ்செய்.

21 கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதல்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய்(து), உய்கவே.—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

பெரியார் தாம்வருந்தியேனும் பிறர்வருத்தம் மாற்றுவர்

22. பேரறிஞர் தாக்கும் பிறர் துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாக்கும் கடிது.

கற்றாரைக் கற்றவரே விரும்புவர்.

23 கற்ற அறிவினரைக் காமுறுவர் மேல்மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே.—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி,
பால்வேண்டும் வாழைப் பழம்.

நல்லவர் நட்பு நாடோறும் தழைக்கும்.

24 நல்லார் செயுங்கேண்மை, நாள்தோறும் நன்றாகும்.
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே.—நல்லாய்!கேள்,
காய்முற்றின் தின்றிம்,கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்.

அரசரினும் அறிஞரே மேலோர்

25 பொன்னணியும் வேந்தர், புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்.—மின்னுமணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னே! அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ? காண்.

தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த காசிமடம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

நீதிநெறி விளக்கம்.

யாக்கை யழியாமுன் இறைவனை வழுத்தல்.

1 நீரில் குமிழி இளமை, நிறைசெல்வம்
நீரில் சுருட்டு நெடுந்திரைகள்,—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே?
வழுத்தாத(து) எம்பிரான் மன்று.

கல்வியின் பயன்.

2 அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்.
புறங்கடை நல்லிசையும் நாட்டும் -உறுங்கவல்லொன்(று)
உற்றுழியும், கைகொடுக்கும். கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை.

கல்வி யனுபவம்.

3 தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்,
மடங்கொன்(று) அறிவகற்றும்; கல்வி.—நெடுங்காமம்,
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின், முற்றிழாய்!
பிற்பயக்கும் பீழை பெரிது.

கல்விச் செல்வம்.

4 கல்வியே கற்புடைப் பெண்டிர்அப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு.

சொல்வன்மை யுயர்வு.

5 எத்துணைய ஆயினும் கல்வி இடமறிந்(து)
உய்த்துணர்(வு) இல்லெனின் இல்லாகும்.—உய்த்துணர்ந்தும்,
சொல்வன்மை இன்றெனின், என்னாம்? அஃதுண்டேல்,
பொன்மலர் நாற்றம் உடைத்து.

இருந்தும் பயனிலவாதல்.

6 அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,—நவையஞ்சி,
ஈத்துண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன்னலமும்;
பூத்தலில் பூவாமை நன்று.

புகழின் அருமை.

7 கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்,
மலரவன் வண்டமிழோர்க்(கு) ஒவ்வான்.—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா; புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.

கற்குமுறை.

8 வருந்தித்தாம் கற்றன ஓம்பாது, மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்;—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச், சொரிந்திட்(டு), அரிப்பரித்தா
எய்த்துப் பொருள்செய் திடல். [ங்(கு)

எளியவன் கல்வி ஏற்றமுறாது.

9 எனைத்துணைய ஏனும் இலம்பாட்டார் கல்வி,
தினைத்துணையும் சீர்ப்பா(டு) இலவாம்.—மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின், மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்.

பணியுடையவனைப் பலரும் பின்செல்லல்.

10 இவறன்மை கண்டும் உடையாரை யாரும்,
குறையிரந்தும் குற்றேவல் செய்ப.—பெரிதுந்தாம்
முற்பகல் நோலாதார், நோற்றாரைப் பின்செல்லல்;
கற்பன்றே கல்லாமை அன்று.

கல்வியே கலனே கலன்.

11 கற்றார்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா. யாரே
அழகுக்(கு) அழகுசெய் வார்?.

கல்விக்கருவம் காட்டலாகாது.

12 முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க.—சிற்றுளியால்
கல்லும் தகரும். தகரா, கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தின் ஆல்.

செல்வத்தில் திருப்தியடைதல் அவசியம்.

13 தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகமகிழ்க.—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக. கற்றதெல்லாம்,
எற்றே? இவர்க்குநாம் என்று.

சிறியோர் நடத்தையிற் பெரியோர் ஒழுக்கம்

14 ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப.—தூக்கின்
மெலியது மென்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு.

தற்புகழ்ச்சி கேடுபயப்பது.

15 தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்ருல்.—தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ(து) இன்பம்
நயவாமை அன்றே நலம்.

பிறர்துறை கூறுதவன் புகழுடைவன்.

16 பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன்(று) உண்டு.—பிறர்பிறர்
சீர்எல்லாம் தூற்றிச், சிறுமை புறங்காத்து,
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

இறை மாட்சியர் நிலைமை.

17 பழமை கடைப்பிடியார், கேண்மையும் பாரார்,
கிழமை பிறிதொன்றும் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை உண்டே இறைமாண்டார்க்(கு), ஏதிலரும்
ஆர்வலரும், இல்லை அவர்க்கு.

அல்லனபோல் ஆவனவும் உண்டு.

18 உறுதி பயப்ப கடைபோகா ஏனும்
இறுவரை காறும் முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்ருல் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில.

முயற்சி பலனளிக்கும்.

19 உலையா முயற்சி களைகணு ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே.—உலகறியப்
பால்முளை தின்று மறலி உயிர்குடித்த
கால்முளையே போலுங் கரி.

காரியசித்தி யடையும் வகை.

20 காலம் அறிந்தாங்(கு), இடமறிந்து, செய்வினையின்
மூலம் அறிந்து, விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலிதெரிந்(து),
ஆள்வினை ஆளப் படும்.

கருமமே கண்ணாயினர் செய்கை.

21 மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி,
அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார்.

வஞ்சகர் நீக்கமும் நெஞ்சகர் நேயமும்.

22 புறம்நட்(டு) அகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்.—கழிபெரும்
கண்ணோட்டம் செய்யார் கருவியிட்(டு) ஆற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

இன்னார் கனிமொழியும் கடுவே.

23 இனியவர் என்சொலினும் இன்சொல்லே, இன்னார்
கனியும் மொழியும் கடுவே;—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்.

நல்லாறு இவையெனல்.

24 பொய்,குறளை, வன்சொல், பயனிலஎன்(று) இந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது.—மெய்யில்
புலம்ஐந்தும் காத்து, மனமா(சு) அகற்றும்
நலம்அன்றே நல்ஆ(று) எனல்.

நல்லார் தீயசெய்கைக் குட்படார்.

25 நல்லா(று) ஒழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்(கு) ஒருப்படார்.—பல்பொறிய
செங்கண் புலியே(று) அறப்பசித்தும், தின்னாவாம்;
பைங்கண் புனத்தபைங் கூழ்.

ஓர்பற் பாலவை.

26 குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும், வாய்மை
நலம்விற்றுக் கொள்ளும் திருவும்,—தவம்விற்றாங்(கு)
ஊன்ஓம்பும் வாழ்வும், உரிமைவிற்(று)உண்பதூஉம்;
தான்ஓம்பிக் காத்தல் தலை.

கீழ்மக்கள் கேடுணராமை.

27 கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்(கு)
உண்டோ உணர்ச்சிமற்(று) இல்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம், கண்துயில்வ;
பேரா பெருமூச்(சு) எறிந்து.

கேடுவது காட்டுங்குறிகள்.

28 நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி(து) ஆதல்,
கெடுவது காட்டும் குறி.

பண்புடையார் தருவொப்பர்.

29 கண்நோக்(கு) அரும்பா, நகைமுகமே நாள்மலரா
இன்மொழியின் வாய்மையே தீம்காயா,—வண்மை
பலமா, நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு.

ஒருவர்க்கு அலட்சியமாயிருப்பது பிறர்க்குப் பேரிதுபயனும்.

30 வாங்கும் கவளத்(து) ஒருசிறிது வாய்தப்பில்,
தூங்கும் களிறோ துயர்உறா.—ஆங்கதுகொண்(டு)
ஊரும் எறும்பிங்(கு) ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோ(டு) அயின்று.

அமைச்சியல்.

31 செவிசுடச் சென்றாங்(கு) இடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா.—கவுள்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற்(று) எத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு.

படிப்பற்றவர் வாய்பேசாதிருத்தல்.

32 கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்(கு)
ஒற்கமின்(று) ஊத்தைவாய் அங்காத்தல்;—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.

இவரிவர்க்குத் தெய்வம் இவரெனல்.

33 குலமகட்குத் தெய்வம் கொழுநனே. மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்.—அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம். அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை.

இறைமாட்சி

34 கண்ணில் சொலிச்செவியில் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே ஆயினும்—தண்ணளியான்
மன்பதை ஓம்பாதார்க்(கு) என்னாம்? வயப்படைமற்(று)
என்பயக்கும் ஆண்அல் அவர்க்கு?

அரசன் இறை கொள்ளும் ஆறு.

35 குடிகொன்(று) இறைகொள்ளும் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலும் மாண்பே.—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

இதுவும் அது.

36 இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்;
நின்று குறையிரப்ப நேர்படான்.—சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான்; ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்.

தீயவர் ஆக்கம் தீயனவே.

37 தீயசெயல் செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல.—தீயன
நல்லன ஆகாவாம். நாவின் புறம்நக்கிக்
கொல்லும் கவயமா போல்.

காமிகள் செய்யும் கடும்பாவங்கள்.

38 கொலைஅஞ்சார், பொய்நாணார், மானமும் ஓம்பார்,
களவொன்றோ ஏனையவும் செய்வார்.—பழியோடு
பாவமிஃ(து) என்னார் பிறிதுமற்(று) என்செய்யார்
காமம் கதுவப்பட் டார்.

மக்கட் பேறு.

39 கற்புடுத்(து) அன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே(று)
என்பதோர் செல்வமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

கற்பில் மகளிர்செய்கை

40 முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்,
நிறையும் நெடுநாணும் பேணார்.—பிரிதுமொரு
பெற்றிமை பேதைமைக்(கு) உண்டே பெரும்பாவம்
கற்பில் மகளிர் பிறப்பு.

கடவுள்யாவும் உணர்வார்

41 வஞ்சித்(து) ஒழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ(து) அறிவு.

பழிமொழி பரவுதலுடையது.

42 மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங்(கு) ஓடிப் பறக்கும்.—கழி முடைப்
புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்று உதைக்கும் சேயார் முகத்து.

மெய் யுணர்ந்தவர்.

43 மெய்உணர்ந்தார் பொய்ம்மேல் புலம்போக்கார் மெய்உணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்உணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாணம் நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறிந்து.

தீயவர் செல்வம் தீமைக்குற்றதே.

44 தீயசெயல் செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வே(று) அல்ல.—தீயன
நல்லன ஆகாவாம். நாவின் புறம்நக்கிக்
கொல்லும் கவயமாப் போல்.

ஆண்டவனே அன்பரை நல்லாற்றுப்படுப்பான்.

45 தெய்வம் உள(து) என்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண் இன்று நின்(று) ஒறுக்கும்—தெய்வம்
இல(து) என்பார்க்(கு) இல்லைதம் இன்புதல்வர்க்(கு)
பலகாலும் சொல்வார் பயன். [அன்றே

ஓர் சைவத்திருவாளர் இயற்றியதாகும்
நீதிவெண்பா.

பிறப்பிடத்தால் பெருமை குறையாதவை

1 தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா(து)—ஆம்அழல்மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்?

மூடர் நேசம் மழுமோசம்.

2 அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்,
சிறுவன் பகையாம் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்தான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றது(ஒ)ரு வேந்தைக் குரங்கு.

இன்சொல் ஏற்றம்.

3 மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்கடின
வன்மொழியி னால்இகழும் மண்ணுலகம் —நன்மொழியை
ஓதுகுயில் ஏது அங்(கு) உதவியது? கர்த்தபம்தான்
ஏது(அ)பராதம்செய்த(து) இன்று.

அன்பாற் பகைவரிடமும் அவாவின அடையலாம்.

4 பகைசேரும் எண்நான்கு பற்கொண்டே நல்நா
வகைசேர் சுவைஅருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித்(து) அவரால்
சுகம்உறுதல் நல்லோர் தொழில்.

இளமையில் வருந்திக்கற்றவரே எழுவர்.

5 வருத்தவளை வேய்அரசர் மாமுடியின் மேலாம்,
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினிஎல் லாம்திரிந்து
தாழும்அவர் தம்அடிக்கீழ்த் தான்.

இரப்பவர் எளிமை.

6 நொய்தாம் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தாம் இரப்போன் நுவலுங்கால்—நொய்யசிறு
பஞ்சுதனின் நொய்யானைப் பற்றுமோ காற்றனுக
அஞ்சும்அவன் கேட்ப(து) அறிந்து.

உணவுட் கொள்வகை.

7 ஒருபோது யோகியே ஒண்தளிர்க்கை மாதே!
இருபோது போகியே என்ப.—திரிபோது
ரோகியே நான்குபோ(து) உண்பான் உடல்விட்டுப்
போகியே என்று புகல்.

மூறையே சிறப்புடையவர்.

8 கண்இரண்டே யாவர்க்கும், கற்றோர்க்கு மூன்றுவிழி,
எண்ணுவிழி எழாகும் ஈவோர்க்கு,—நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்(கு)
அநந்தம் விழிஎன்(று) அறி.

முறையே அதிகரிக்கும் தீமை.

9 ஆன்அந் தணர்மகளிர் அன்பாம் குழந்தைவதை
மானம் தரும்பிசி வார்த்தைஇவை—மேல்நிரையே
கூறவரு பாவம் குறையா(து)ஒவ் வொன்றுக்கும்
நூறு(அ)திகம் என்றே நுவல்.

தாழ்வையடைபவர்.

10 பெற்(று) அமையும் என்னுப் பெரியோரும் பெற்றபொருள்
மற்(று) அமையும் என்றே மகிழ்வேந்தும்—முற்றியநல்
மானம்இலா இல்லாளும் மானம்உறு வேசியரும்
ஈனம் உறுவார் இவர்.

கற்றோர் கனம் அறிவர் கற்றோரே.

11 கற்றோர் கனம்அறிவர் கற்றோரே கற்(று)அறியா
மற்றோர் அறியார் வருத்தம்உறப்—பெற்(று)அறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறும்துயரம்
நொந்(து)அறிகு வாளோ நுவல்.

எண்ணித்துணிக கருமம்.

12 செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவ(து)அன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே.—செய்யஒரு
நற்குடியைக் காத்த நகுலனை முன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்.

விஷத்தன்மை பொருந்தியவர்

13 ஈக்கு விடம்தலையில் எய்தும், இரும்தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே.—நோக்கரிய
பைங்கண்அர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே ஆம்,

பாம்பினும் கொடியர் துட்டர்.

14 துர்ச்சனரும் பாம்பும் துலைஒக் கினும்பாம்பு
துர்ச்சனரை ஒக்குமோ? தோகையே!—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலும் இணங்காரே பாம்புமணி
மந்திரத்தால் ஆகுமே வசம்.

துட்டரைக்கண்டால் தூரத்தூர.

15 கொம்(பு) உளதற்(கு) ஐந்து குதிரைக்குப்பத்துமுழம்
வெம்புகரிக்(கு) ஆயிரம்தான் வேண்டுமே.—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

எங்கும் சிறப்படைவன.

16 ஆனை மருப்பும் அரும்கவரி மான்மயிரும்
கான வரிஉகிரும் கற்றோரும்.—மானே!
பிறந்தஇடத்(து) அன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தஇடத்(து) அன்றோ? சிறப்பு.

நிலைமாறச் சீழ்மை அடைபவர்.

17 தலைமயிரும் கூர்உகிரும் வெண்பல்லும் தத்தம்
நிலையுடைய மாணவரும் நிற்கும்—நிலைதவறுத்
தானத்தில் பூச்சியமே சாரும். நிலைதவறும்
தானத்தில் பூச்சியமோ? தான்.

மனையாள் மாண்பு.

18 அன்னை தயையும் அடியாள் பணியும், மலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்,—வன்னமிகு
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவைஉடையாள் பெண்.

பெண்கள் கூட்டுரை பெருங்கேடு.

19 பெண்ஒருத்தி பேசில் பெரும்பூமி தான்அதிரும்.
பெண்இருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசில் அலைசுவறும் பேதையே! பெண்பலர்தாம்
பேசில்உல(கு) என்ஆமோ பின்.

முதறிஞர் வீண்மொழியாடார்.

20 சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்(று) அமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே. விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி.

நம்பிற்பயன்தருவன.

21 மந்திரமும் தேவும் மருந்தும் குரு அருளும்
தந்திரமும் ஞானம் தருமுறையும்—யந்திரமும்
மெய்என்னில் மெய்யாய் விளங்குமே, மேதினியில்
பொய்என்னில் பொய்யாகிப் போம்.

சிவனிலும் சிவனடியார் பெருந்திறலாளர்.

22 ஈசன்எதிர் நின்றாலும் ஈசன் அருள் பெற்றுயர்ந்த
நேசர்எதிர் நிற்ப(து) அரிதாமே.—தேசுவளர்
செங்கதிர்முன் நின்றாலும் செங்கதிர வன்கிரணம்
தங்குமணல் நிற்சரிதே தான்.

நற்றாயர்கள்.

23 தன்னை அளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி அரசன் பயில்தேவி—தன்மனையைப்
பெற்றாள் இவர்ஐவர் பேசில் எவருக்கும்
நற்றாயர் என்றே நவில்.

பொருளால் பெருந்துன்பம்.

24 இன்னல் தருஞ்பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின் அதனைப் பேணுதலும் துன்பமே.—அன்ன(து)
அழித்தலும் துன்பமே, அந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே ஆம்.

ஞானிக்குத் துன்பமும் மூடருக்கு இன்பமும் இல்.

25 தூய அறிவினர்முன் சூழ்துன்பம் இல்லையாம்,
காயும் விடம்கருடற்(கு) இல்லையாம்.—ஆயுங்கால்
பன்முகம்சேர் தீமுன் பயில்சீதம் இல்லையாம்;
துன்முகனுக்(கு) உண்டோ? சுகம்.

தனித்துண்ணல் தாழ்வானது.

26 தென்புலத்தார் தெய்வம் விருந்(து)ஒக்கல் என்(று)இவரோடு
இன்புறத்தான் உண்டல் இனிதாமே.—அன்புறவே
தக்கவரை இன்றித் தனித்(து)உண்டல் தான்கவர்மீன்
கொக்(கு)அருந்தல் என்றே குறி.

அறிவுளவோர்மகன் அநேகரின்மேல்.

27 பொற்(பு)அறிவில் லாதபல புத்திரரைப் பேறலின்ஓர்
நற்புதல்வனைப்பெறுதல் நன்றாமே.—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினால் ஏதுபயன்?
ஒன்றமையா தோகரிக்கன்(று) ஒது.

மாதர்மனம் மதிப்பறுதது.

28 அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமும்
கத்துபுனல் மீன்பதமும் கண்டாலும்—பித்தரே
கான்ஆர் தெரியல் கடவுளரும் காண்பரோ?
மான்ஆர் விழியார் மனம்.

ஈவது விலக்குவோர் முடைமுள்ளாம்.

29 தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாரும் சிலர்உண்டே—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிகள் ஈந்(து)உதவு நல்மரத்தைக்
கட்டுமுடை முள்ளனவே காண்.

பிரிவுக்கேற்ப நலன் அழிவன.

30 மாதா மரிக்கின் மகன்நாவின் நற்சுவைபோம்,
தாதா எனிற்கல்வி தான்அகலும்.—ஓதின்உடன்
வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போம்,மனையேல்
அந்தோ இவையாவும் போம்.

கெடுப்பினும் கெடாதவை

31 பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்,—முன்இருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

இயல்பிலேயே பகைமையுடையவர்.

32 வேசியரும் நாயும் விதிநூல் வயித்தியரும்
பூசுரரும் கோழிகளும் பொன்அனையாய்!—பேசில்ஒரு
காரணம்தான் இன்றியே கண்டஉடனேபகையாம்
காரணம்தான் அப்பிறப்பே காண்.

இயல்பிலேயே பகைமை யுடையவர்.

33 அன்னம்அனை யாய்குயிலுக்(கு) ஆன அழகு இன்இசையே,
கன்னல்மொழி யார்க்(கு)அழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க்(கு) அழகு கருணையே ஆசைமயக்(கு)
அற்றோர்க்(கு) அழகு பொறை ஆம்.

தீயவரிடம் படிப்பைப் பெறலாகாது.

34 தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்(று)அவரைத்
தூயவர்என்(று) எண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ஒளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்(று)அதனை நாடு.

எவரெவர்க்கு எவ்வேவை இலையெனல்

35 போற்று குருகிளைஞர் பொன்ஆசை யோர்க்(கு)இல்லை.
தோற்றுபசிக்(கு) இல்லை சுவைபாகம்—தேற்றுகல்வி
நேசர்க்(கு) இலைசுகமும் நித்திரையும் காமுகர்தம்
ஆசைக்(கு) இலைபயம்மா னம்.

பாலோடளாயநீர்.

36 பாலின்நீர் தீஅணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலும்நீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலின்நெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து.

ஆக்கையால் அறிவறியப்படாது.

37 வாக்குநயத் தால்அன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தால்அறியல் ஆகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீ(டு)இசையால் அன்றியே
கோலத்(து) அறிவருமோ கூறு.

தீ இனத்தாற் சிறப்பழிவது.

38 நிந்தைஇலாத் தூயவரும் நிந்தையரைச் சேரில்அவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழ்இருந்(து)ஆன் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.

புத்திரி நலத்தில் பெற்றோர்தியர் கவனம்.

39 பெண்உதவும் காலை, பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்—நண் இடையில்
கூரியநல் சுற்றம் குலம்விரும்பும் காந்தனது
பேர்அழகு தான்விரும்பும் பெண்.

சபைக்கு அழகு கற்றவனே.

40 கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல் ஆரும்
எண்இலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்நிலா ஆமோ விளம்பு.

மதுரைத்தமிழாசிரியர் மகனார்
பூதஞ்சேந்தனார் அருளிய

இனிது நாற்பது.

1 பிச்சை புக்(கு) ஆயினும் கற்றல் மிகஇனிதே.
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்இனிதே.
முத்(து)ஏர் முறுவலாய்! சொல்இனி(து). ஆங்(கு)இனி
தெற்றௗவும் மேலாயார்ச் சேர்வு. [தே

2 ஏவது மாறு இளங்கிளைமை முன் இனிதே.
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே
ஏர்உடையான் வேளாண்மை தான்இனி(து); ஆங்குஇனி
தேரிற்கொள் நட்புத் திசைக்கு. [தே

3 யானை உடைப்படை காண்டல் மிகஇனிதே.
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்காமை முன்இனிதே.
கான்யாற்(று) அடைகரை ஊர்இனிது; ஆங்(கு)இனிதே
மானம் உடையார் மதிப்பு.

4 கொல்லாமை முன் இனிது, கோல்கோடி மாராயம்
செய்யாமை முன் இனிது செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனி(து)என்ப, யார்மாட்டும்
பொல்லாங்(கு) உரையாமை நன்கு.

5 ஆற்றும் துணையால் அறம்செய்கை முன் இனிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்(பு)இனிதே.
வாய்ப்(பு)உடையார் ஆகி வலவைகள் அல்லாரைக்
காப்(பு) அடையக் கோடல் இனிது

6 ஊரும் கலிமா உரன்உடைமை முன் இனிதே;
தார்புனை மன்னர் தமக்(கு)உற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதம்காண்டல் முன் இனிதே;
ஆர்வம் உடையார் ஆற்றவும் நல்லவை
பேதுறார் கேட்டல் இனிது.

7 தம்கண் அமர்(பு)உடையார் தாம்வாழ்தல் முன் இனிதே
அம்கண் விசும்பின் அகல்நிலாக் காண்(பு)இனிதே
பங்கம்இல் செய்கையார் ஆகிப் பரிந்(து) யார்க்கும்
அன்(பு)உடையார் ஆதல் இனிது.

8 கடம்உண்டு வாழாமை காண்டல் இனிதே.
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே.
மனைமாண்(பு) இலாதவரை அஞ்சி அகறல்
எனைமாண்பும் தான் இனிது நன்கு.

9 அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே,
உயிர்சென்று தாம்படினும் உண்ணார்கைத்(து) உண்ணா
பெருமைபோற் பீ(டு)உடைய(து) இல்.

10 குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே.
கழறும் அவைஅஞ்சான் கல்விஇனிதே,
மயரிகள் அல்லாதார் மாண்(பு) உடையார்ச் சேரும்
திருவும்தீர்(வு) இன்றேல் இனிது.

11 மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே
தானம் அழியாமை தான்அடங்கி வாழ்(வு) இனிதே
ஊனம்ஒன்(று) இன்றி உயர்ந்த பொருள் உடைமை
மானிடவர்க்(கு) எல்லாம் இனிது.

12 குழவி தளர்நடை காண்டல் இனிதே.
அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே
வினைஉடையான் வந்(து)அடைந்து வெய்துறும்போழ்து
மனன் அஞ்சான் ஆகல் இனிது.

13 கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச்சேர்தல் மிகமாண முன்இனிதே.
எள்துணை ஆனும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

14 மன்றின் முதுமக்கள் வாழும் பதிஇனிதே
தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்(பு)இனிதே.
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்(டு)எழுதல் காலை இனிது.

15 சலவரைச் சாரா விடுதல் இனிதே
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க்(கு) எல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது.

16 பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே
அறம்புரிந்(து) அல்லவை நீக்கல் இனிதே
மறந்தேயும் மாணா மயரிகண் சேராத்
திறம்தெரிந்து வாழ்தல் இனிது.

17 வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
ஒருவர்பாங்(கு) ஆகாத ஊக்கம் இனிதே.
பெருவகைத்(து) ஆயினும் பெட்டவை செய்யார்
திரி(பு)இன்றி வாழ்தல் இனிது.

18 காவோ(டு) அறக்குளம் தொட்டல் மிகஇனிதே,
ஆவோடு பொன்ஈதல் அந்தணர்க்கு முன்இனிதே
பாவமும் அஞ்சாராய்ப் பற்றும் தொழில்மொழிச்
சூதரைச் சோர்தல் இனிது.

19 ஐவாய வேட்கை அவா அடக்கல் முன் இனிதே
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கண் தீர்(வு)இனிதே
நில்லாத காட்சி நிறைஇல் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது.

20 தானம் கொடுப்பான் தகைஆண்மை முன்இனிதே.
மானம் படவரின் வாழாமை முன்இனிதே.
ஊனம்கொண்(டு) ஆடார் உறுதி உடையவை
கோள் முறையால் கோடல் இனிது.

21 ஆற்றானை ஆற்(று) என்(று) அலையாமை முன்இனிதே.
கூற்றம் வர(வு) உண்மை சிந்தித்து வாழ்(வு)இனிதே,
ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத
தேர்ச்சியில் தேர்(வு) இனிய(து) இல்.

22 நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனிஇனிதே
மன்றக் கொடும்பா(டு) உரையாத மாண்(பு) இனிதே.
அன்(று) அறிவார் யார்என்(று) அடைக்கலம் வௌவாத
நன்றியில் நன்(கு)இனியது இல்.

23 சிற்றாள் உடையான் படைக்கலம் மாண்(பு) இனிதே.
கட்டார் உடையான் பகைஆண்மை முன்இனிதே.
எத்துணையும் ஆற்ற இனி(து)என்ப பால்படும்
கற்றா உடையான் விருந்து.

24 பத்துக் கொடுத்தும் பதிஇருந்து வாழ்(வு)இனிதே.
வித்துக்குற்(று) உண்ணா விழுப்பம் மிகஇனிதே.
பற்பல நாளும் பழு(து)இன்றிப் பாங்(கு)உடைய
கற்றலின் காழ்இனிய(து) இல். (24)

25 அவ்வித்(து) அழுக்கா(று) உரையாமை முன்இனிதே.
செவ்வியனாய்ச் செற்றுச் சினம்கடிந்து வாழ்வுஇனிதே
கவ்வித்தாம் கொண்டுதாம் கண்டது காமுற்று
வவ்வார் விடுதல் இனிது.

கபிலர் இயற்றிய

இன்னா நாற்பது

1 முக்கண் பகவன் அடிதொழாதார்க்(கு) இன்னா;
பொற்(பு)அனை ஊர்தியை உள்ளா(து) ஒழு(கு) இன்னா.
சக்கரத் தானை மறப்(பு)இன்னாது; ஆங்(கு) இன்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு.

2 பார்ப்பார்இல் கோழியும் நாயும் புகல்இன்னா;
ஆர்த்த மனைவி அடங்காமை நன்(கு)இன்னா;
பாத்(து)இல் புடைவை உடைஇன்னாது; ஆங்(கு)இன்னா
காப்பாற்றா வேந்தன் உலகு.

3 கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா;
நெடுநீர் புணைஇன்றி நீந்துதல் இன்னா;
கடுமொழி ஆளர் தொடர்(பு)இன்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.

4 எரு(து)இல் உழவர்க்குப் போ(கு)ஈரம் இன்னா;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா;
திருஉடை யாரைச் செறல்இன்னா; இன்னா
பெருவலியார்க்(கு) இன்னா செயல்.

5 சிறைஇல் கரும்பினைக் காத்(து)ஓம்பல் இன்னா;
புரைசேர் பழங்கூரை சேர்ந்(து)ஒழுகல் இன்னா;
முறைஇன்றி ஆளும் அர(சு)இன்னா; இன்னா
மறைஇன்றிச் செய்யும் வினை.

6 அறம்மனத்தார் கூறும் கடுமொழியும் இன்னா;
மறம்மனத்தார் ஞாட்பின் மடிந்(து)ஒழுகல் இன்னா;
இடும்பை உடையார் கொடை இன்னா; இன்னா
கொடும்பா(டு) உடையார்வாய்ச் சொல்.

7 ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா;
நாற்றம் இலாத மலரின் அழகுஇன்னா;
தேற்றம் இலாதான் துணி(பு)இன்னா; ஆங்(கு)இன்னா
மாற்றம் அறியான் உரை.

8 பகல்போலும் நெஞ்சத்தார் பண்(பு)இன்மை இன்னா;
நகைஆய நண்பினார் நார்இன்மை இன்னா;
இகலின் எழுந்தவர் ஓட்(டு)இன்னா; இன்னா
நயம்இல் மனத்தவர் நட்பு.

9 கள்இல்லா மூதூர் களிகட்கு நன்(கு)இன்னா;
வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு இன்னா;
வண்மை இலாளர் வனப்(பு)இன்னா; ஆங்(கு)இன்னா
பண்இல் புரவி பரிப்பு.

10 பொருள்உணர்வார் இல்வழிப் பாட்(டு) உரைத்தல் இன்னா;
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப்போக்(கு) இன்னா;
அருள்இலார் தம்கண் செல(வு) இன்னா;
பொருள்இல்லார் வண்மை புரிவு.

11 மணிஇலாக் குஞ்சரம் வேந்(து)ஊர்தல் இன்னா;
துணி(வு)இல்லார் சொல்லும் தறுகண்மை இன்னா;
பணியாத மன்னர்ப் பணி(வு)இன்னா; இன்னா;
பிணி அன்னார் வாழும் மனை.

12 புல்ஆர் புரவி மணிஇன்றி ஊர்(வு) இன்னா;
கல்லார் உரைக்கும் கருமம் பொருள் இன்னா;
இல்லாதார் நல்ல விருப்(பு)இன்னா; ஆங்(கு)இன்னா
பல்லாருள் நாணப் படல்.

13 உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்(பு) இன்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா.
கண்இல் ஒருவன் வனப்(பு)இன்னா; ஆங்குஇன்னா
எண்இலான் செய்யும் கணக்கு.

14 ஆன்(று) அவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா;
மான்(று) இருண்ட போழ்தின் வழங்கல் பெரி(து)இன்னா
நோன்(று)அவிந்து வாழாதார் நோன்(பு) இன்னா; ஆங்கு
ஈன்றாளை ஓம்பா விடல். [இன்னா

15 உரன்உடையான் உள்ளம் மடிந்(து)இருத்தல் இன்னா;
மறன்உடை ஆள்உடையான் மார்(பு) ஆர்த்தல் இன்னா;
சுரம்அரிய கானம் செல(வு)இன்னா; இன்னா
மனவறி யாளர் தொடர்பு.

16 குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா;
நிலத்(து)இட்ட நல்வித்து நாறாமை இன்னா;
நலத்தகையார் நாணாமை இன்னா; ஆங்(கு)இன்னா
கலத்தல் குலம்இல் வழி.

17 மாரிநாள் கூவும் குயிலின் குரல்இன்னா;
ஈரம் இலாளர் கடுமொழிக் கூற்(று)இன்னா;
மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்(கு)இன்னா; ஆங்(கு)இன்னா
மூரி எருத்தால் உழவு.

18 யானை இல் மன்னரைக் காண்டல் நனிஇன்னா;
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்குதல் முன்இன்னா;
தேன்நெய் புளிப்பின் சுவைஇன்னா; இன்னா
கான்யா(று) இடைஇட்ட ஊர்.

19 சிறைஇல்லா மூதூரின் வாயில்காப்(பு) இன்னா;
துறைஇருந்(து) ஆடை கழுவுதல் இன்னா;
அறைபறை ஆயவர் சொல்இன்னா; இன்னா
நிறைஇல்லான் கொண்ட தவம்.

26 ஏமம்இல் மூதூர் இருத்தல் மிகஇன்னா;
தீமை உடையார் அயல்இருத்தல் நன்குஇன்னா;
காமம் முதிரின் உயிர்க்(கு)இன்னா; ஆங்(கு)இன்னா
யாம்என் பவரோடு நட்பு.

21 பெரியாரோ(டு) யாத்த தொடர்விடுதல் இன்னா;
அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாம்உற்ற கூற்(று)இன்னா; இன்னா
பெரியார்க்குத் தீய செயல்.

22 பெருமை உடையாரைப் பீ(டு)அழித்தல் இன்னா;
கிழமை உடையார்க் களைந்திடுதல் இன்னா;
வளமை இலாளர் வனப்(பு)இன்னா; இன்னா
இளமையுள் மூப்புப் புகல்.

23 கல்லாதான் ஊரும் கலிமாப் பரிப்(பு)இன்னா;
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா;
இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா; ஆங்(கு)இன்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

24 குறிஅறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா;
அறி(வு)அறியான் நீரின்கண் பாய்ந்(து)ஆடல் இன்னா
அறி(வு)அறியா மக்கட் பெறல்இன்னா, இன்னா;
செறி(வு)இலான் கேட்ட மறை.

25 நெடுமரம் நீள்கோட்(டு) உயர்பாய்தல் இன்னா;
கடுஞ்சினம் வேழத்(து) எதிர்சேறல் இன்னா;
ஒடுங்கி அர(வு) உறையும் இல்இன்னா; இன்னா
கடும்புலி வாழும் அதர்.

26 பண்அமையா யாழின் பாடல் பெரி(து)இன்னா;
எண்அறியா மாந்தர் ஒழுக்குநாள் கூற்(று)இன்னா;
மண்ணின் முழவின் ஒலிஇன்னா; ஆங்(கு)இன்னா
தண்மை இலாளர் பகை.

27 அடக்கம் உடையவன் மீளிமை இன்னா;
துடக்கம் இலாதவன் தற்செருக்(கு) இன்னா;
அடைக்கலம் வவ்வுதல் இன்னா; ஆங்(கு)இன்னா;
அடக்க அடங்காதார் சொல்.

28 பொருள் இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா;
நெடுமாடம் நீள்நகர்க் கைத்(து)இன்மைஇன்னா;
வருமனை பார்த்திருந்(து) ஊண் இன்னா; இன்னா
கெடும்இடம் கைவிடுவார் நட்பு.

29 நறிய மலர்பெரிது நாறுமை இன்னா;
துறைஅறியான் நீர்இழிந்து போகுதல் இன்னா;
அறியான் வினாப்படுதல் இன்னா; ஆங்(கு)இன்னா
சிறியார்மேல் செற்றம் கொளல்.

30 ஒழுக்கம் இலாளர்க்(கு) உறஉரைத்தல் இன்னா;
இழித்தகு நாலும் விழையாதார்க்(கு) இன்னா;
இழித்த தொழிலவர் நட்(பு) இன்னா; இன்னா
கழிப்(பு)உலாய் மண்டிலம் கொட்பு.

௨.

நல்லாதனர் இயற்றிய

திரிகடுகம்.

---

1 தன்குணம் குன்றாத் தகைமையும் தாஇல்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும்,—நன்(கு)உணர்வின்
நால்மறை ஆளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேல்முறை ஆளர் தொழில்.

2 கல்லார்க்(கு) இனன்ஆய் ஒழுகலும், காழ்கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும்,—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்
அறியாமை யான்வரும் கேடு.

3 பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்ற
பெற்றத்துள் கோல்இன்றிச் சேறலும்—முன்தன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும், இம்மூன்றும்
சாவ உறுவான் தொழில்.

4 வழங்காத் துறைஇழிந்து நீர்ப்போகும், ஒப்ப
விழை(வு) இலாப் பெண்டிர்தோள் சேர்வும்—உழந்து
விருந்தினனாய் வேற்(று)ஊர் புகலும்இம் மூன்றும்,
அரும்துயரம் காட்டும் நெறி.

5 பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்
திறன்வேறு கூறின் பொறையும்,—அறவினையைக்
கார்ஆண்மை போலஒழுகலும், இம்மூன்றும்
ஊர்ஆண்மை என்னும் செருக்கு.

6 பெருமை உடையார் இனத்தின் அகறல்,
உரிமைஇல் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,
விழுமிய அல்ல துணிதல்இம் மூன்றும்
முழுமக்கள் காதல் அவை.

7 கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்(கு) அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்,-பாத்(து)உண்ணு
தன்மை இலாளர் அயல்இருப்பும், இம்மூன்றும் [ம்
நன்மை பயத்தல் இல.

8 தாள்ஆளன் என்பான் கடன்படா வாழ்பவன்,
வேள்ஆளன் என்பவன் விருந்(து)இருக்க-உண்ணுதான்,
கோள்ஆளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேள்ஆக வாழ்தல் இனிது.

9 சீலம் அறிவான் இளங்கிளை, சாலக்
குடிஓம்பல் வல்லான் அரசன்,—வடுஇன்றி
மாண்ட குணத்தான் தவசிஎன்(று) இம்மூவர்
யாண்டும் பெறற்(கு) அரியார்.

10 பொய்வழங்கி வாழும் பொறிஅறையும், கைதிரிந்து
தாழ்(வு)இடத்து நேர்கருதும் தட்டையும்,—ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும், இம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

11 மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மா(சு)இல்சீர்ப்
பெண்ணினுள் கற்(பு) உடையாள் பெற்றானும்,—உண்ணுநீர்க்
கூவல் குறை(வு)இன்றித் தொட்டானும், இம்மூவர்
சாவா உடம்(பு)எய்தி னார்.

12 ஆசை பிறன்கண் படுதலும், பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்,—கதித்(து)ஒருவன்
கல்லான்என்(று) எள்ளப் படுதலும், இம்மூன்றும்;
எல்லார்க்கும் இன்னா தன.

13 வருவாயுள் கால்வழங்கி வாழ்தல், செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்(பு)உடைமை,—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல், இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

14 பற்(று)என்னும் பாசத் தளையும், பலவழியும்
பற்(றி) அறு(த்து) ஓடும் அவாத்தேரும்,—தெற்றெனப்
பொய்த்(து)உரை என்னும் பகைஇருளும், இம்மூன்றும்
வித்(து)அற வீடும் பிறப்பு.

15 தானம் கொடுக்கும் தகைமையும், மானத்தார்
குற்றம் கடிந்த ஒழுக்கமும்,—தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும், இம்மூன்றும்;
நல்வினை ஆர்க்கும் கயிறு.

16 ஒல்வ(து) அறியும் விருந்தினனும், ஆர்உயிரைக்
கொல்வ(து) இடைநீக்கி வாழ்வானும்,—வல்லிதின்
சீலம் இனி(து)உடைய ஆசானும், இம்மூவர்
ஞாலம் எனப்படு வார்.

17 உண்பொழுது நீர்ஆடி உண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்,—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை, இம்மூன்றும்;
தூஉயம் என்பார் தொழில்.

18 வெல்வது வேண்டி வெகுண்(டு) உரைக்கும் நோன்(பு)
இல்லது காமுற்(று) இருப்பானும்,—கல்வி [இலியும்,
செவிக்குற்றம் பார்த்(து இருப் பானும்,இம் மூவர்;
உமிக்குத்திக் கைவருந்து வார்.

19 தன்நச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்,
மன்னிய செல்வத்துப் பெரச்சாப்பு நீத்தானும்,
என்றும் அழுக்கா(று) இகந்தானும், இம்மூவர்;
நின்ற புகழ்உடை யார்.

20 பல்அவையுள் நல்லவை கற்றலும், பாத்(து)உண்(டு)
இல்அறம் முட்டா(து) இயற்றலும்,-வல்லிதின் [ஆங்(கு)
தாளின் ஒருபொருள் ஆக்கலும், இம்மூன்றும்;
கேள்வியுள் எல்லாம் தலை.

21 நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்(கு)ஏலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை,— நன்மொழி
சிற்றினம் அல்லார்கண் சொல்லலும்; இம்மூன்றும்;[யைச்
கற்(று)அறிந்தார் பூண்ட கடன்.

22 கோல்அஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்,—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும்,இம் மூன்றும்;
படைவேந்தன் பற்று விடல்.

23 மூன்று கடன்கழித்த பார்ப்பானும், ஓர்ந்து
முறைநிலை கோடா அரசும்,—சிறைநின்(று)
அலவலை இல்லாக் குடியும்இம் மூவர்;
உலகம் எனப்படு வார்.

24 முந்நீர்த் திரையின் எழுந்(து) இயங்கா மேதையும்
நுண்நூல் பெரும்கேள்வி நூல்கரை கண்டானும்,
மைந்நீர்மை இன்றி மயல்அறுப்பான், இம்மூவர்;
மெய்ந்நீர்மை மேல்நிற் பவர்

25 குறளையுள் நட்(பு)அளவு தோன்றும், உறல்இனிய
சால்பினில் தோன்றும் குடிமையும்,—பால்போலும்
தூய்மையுள் தோன்றும் பிரமாணம், இம்மூன்றும்;
வாய்மை உடையார் வழக்கு.

26 தன்னை வியந்து தருக்கலும், தாழ்(வு)இன்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும், இம்மூன்றும்,
செல்வம் உடைக்கும் படை.

27 அலந்தார்க்(கு)ஒன்(று) ஈந்த புகழும், துளங்கினும்,
தன்குடிமை குன்றாத் தகைமையும்,—அன்(பு)ஒடி
நாள்நாளும் நட்பார்ப் பெருக்கலும், இம்மூன்றும்;
கேள்வியுள் எல்லாம் தலை.

28 ஆற்றுனை ஆற்(று) என்(று) அலைப்பானும், அன்(பு) இன்றி
ஏற்றார்க்(கு) இயைவ கரப்பானும்,—கூற்றம்
வர(வு) உண்மை சிந்திபா தானும்,இம் மூவர்;
நிரயத்துச் சென்றுவீழ் வார்.

29 வைததனை இன்சொலாக் கொள்வானும், நெய்பெய்த
சோ(று) என்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்(பு)அதனைக் கட்டிஎன்(று) உண்பானும்,இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

30 கண்ணுக்(கு) அணிகலம் கண்ஓட்டம், ஈகமுற்ற
பெண்ணுக்(கு) அணிகலம் நாண்உடைமை,—நண்ணும்
மறுமைக்(கு) அணிகலம் கல்வி,இம் மூன்றும்;
குறிஉடையார் கண்ணே உள.

31 முந்தை எழுத்தின் வர(வு)உணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தல்இம் மூன்றும்;
விழுப்ப நெறிதூரா ஆறு.

32 கிளைஞர்க்(கு) உதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்—இளையனாய்க்
கள்உண்டு வாழ்வான் குடிமையும், இம்மூன்றும்;
உள்ளன போலக் கெடும்.

33 நன்றிப் பயன்தூக்கா நாண்இலியும் சான்றோர்முன்
மன்றில் கொடும்பா(டு) உரைப்பானும்,—நன்(று)இன்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும், இம்மூவர்;
எச்சம் இழந்துவாழ் வார்.

34 நல்விருந்(து) ஓம்பலின் நட்டாள்ஆம், வைகலும்
இல்புறம் செய்தலின் ஈன்றதாய்,—தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி, இம்மூன்றும்
கற்(பு) உடையாள் பூண்ட கடன்.

35 இல்லார்க்(கு) ஒன்(று) ஈயும் உடைமையும், இவ்உலகில்
நில்லாமை உள்ளும் நெறிப்பாடும்,—எவ்உயிர்க்கும்
துன்(பு)உறுவ செய்யாத தூய்மையும், இம்மூன்றும்;
நன்(று)அறியும் மாந்தர்க்(கு) உள.

36 நிறைநெஞ்(சு) உடையானை நல்குர(வு) அஞ்சும்;
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்;
மறவனை எவ்வுயிரும் அஞ்சும்இம் மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள்.

37 உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும்,
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்,
செப்பம் உடையார் மழைஅனையர் இம்மூன்றும்;
செப்ப நெறிதூரா ஆறு.

38 வாய்நன்(கு) அமையாக் குளனும், வயி(று) ஆரத்
தாய்அமு(து) உண்ணாக் குழவியும்,—சேய்மரபில்
கல்விமாண்(பு) இல்லாத மாந்தரும், இம்மூவர்;
நல்குரவு சேரப்பட் டார்.

39 அருளினை நெஞ்சத்(து) அடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்(து)இன்னா சொல்லகிற் பானும்இம் மூவர்
பிறந்தும் பிறந்(து)இலா தார்.

40 ஈதற்குச் செய்க பொருளை, அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்;
இருள் உலகம் சேராத ஆறு.

41 விழுத்திணைத் தோன்றா தவனும், எழுத்தினை
ஒன்றும் உணராத ஏழையும்,—என்றும்
இறந்(து)உரை காமுறுவானும்,இம் மூவர்
பிறந்தும் பிறவா தவர்.

42 கொண்டான் குறிப்(பு)அறிவாள் பெண்டாட்டி,
செய்வகை செய்வான் தவசி, கொடி(து)ஒரீஇ
நல்லவை செய்வான் அரசன், இவர்மூவர்;
பெய்எனப் பெய்யும் மழை.

43 செந்தீ முதல்வர் அறம்நினைந்து வாழ்தலும்,
வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்,
பெண்பால் கொழுநன் வழிச்செலவும், இம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து.

44 பத்திமை சான்ற படையும், பலர்தொகினும்,
எத்துணையும் அஞ்சா எயில் அரணும்,-வைத்(து)அமை
எண்ணில் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ஆளும் வேந்தர்க்(கு) உறுப்பு.

45 ஐஅறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எய்துவ(து) எய்தாமை முற்காத்தல்—வைகலும்
மாறு ஏற்கும் மன்னர் நிலை அறிதல் இம்மூன்றும்
சீர்எற்ற பேர்அமைச்சர் கோள்.

விளம்பிநாகனார் இயற்றிய
நான்மணிக் கடிகை.

1 மண்ணி அறிப மணிநலம் பண் அமைத்(து)
ஏறியபின் அறிப மாநலம் மா(சு)அறச்
சுட்(டு)அறிப பொன்னின் நலம்காண்பார் கெட்(டு)அறிப
கேளிரால் ஆய பயன்.

2 கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும், மான்வயிற்றின்
ஒள் அரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்?
நல்லாள் பிறக்கும் குடி.

3 கல்லில் பிறக்கும் கதிர்மணி, காதலி
சொல்லில் பிறக்கும் உயர்மதம்—மெல்லென்
அருளில் பிறக்கும் அறநெறி, எல்லாம்
பொருளில் பிறந்து விடும்.

4 திருஒக்கும் தீ(து)இல் ஒழுக்கம், பெரிய
அறன்ஒக்கும் ஆற்றின் ஒழுகல்,—பிறனைக்
கொலைஒக்கும் கொண்டுகண் மாறல், புலைஒக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு.

5 கள்வம்என் பார்க்கும் துயில்இல்லை, காதலிமாட்(டு)
உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை, ஒண்பொருள்
செல்வம்என் பார்க்கும்துயில்இல்லை, அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்.

6 கற்றார்முன் தோன்று கழி(வு) இரக்கம் காதலித்(து)ஒன்
உற்றார்முன் தோன்று உறுமுதல்—தெற்றென [று
அல்ல புரிந்தார்க்(கு) அறம்தோன்று எல்லாம்
வெகுண்டார்முன் தோன்று கெடும்.

7 நிலத்துக்(கு) அணிஎன்ப நெல்லும் கரும்பும்,
குளத்துக்(கு) அணிஎன்ப தாமரை, பெண்மை
நலத்துக்(கு) அணிஎன்ப நாணம், தனக்(கு) அணி
தான்செல், உலகத்(து) அறம்.

8 கந்தில் பிணிப்பர் களிற்றைக் கதம்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பில் பிணிப்பர் கயத்தைச் சான்றோரை
நயத்தில் பிணித்து விடல்.

9 கன்றாமை வேண்டும் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் என்றும்
விடல்வேண்டும் தங்கண் வெகுளி, அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை.

10 பறைநன்று பண் அமையா யாழின் நிறைநின்ற
பெண்நன்று பீ(டு)இலா மாந்தரின்—பண்அழிந்(து)
ஆர்தலின் நன்று பசித்தல் பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று.

11 வளப்பாத்தி உள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொல் குழியுள் இனி(து)எழூஉம் வன்சொல்
கர(வு)எழூஉம் கண்இல் குழிஉள் இர(வு)எழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

12 இன்னாமை வேண்டின் இர(வு)எழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக, தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க, வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

13 கடல்குட்டம் போழ்வர் கலவர், படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும், தோம்இல்
தவக்குட்டம் தன்உடையான் நீந்தும், அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.

14 மனைக்(கு)ஆக்கம் மாண்ட மகளிர், ஒருவன்
வினைக்(கு)ஆக்கம் செவ்வியன் ஆதல் சினச்செவ்வேல்
நாட்(டு)ஆக்கம் நல்லன் இவ் வேந்(து)என்றல் கேட்(டு)ஆக்
கேளிர் ஒரீஇ விடல். [கம்

15 பெற்றான் அதிர்ப்பின் பிணைஅன்னாள் தான்அதிர்க்கும்
கற்றான் அதிர்ப்பின் பொருள்அதிர்க்கும்—பற்றிய
மண்அதிர்ப்பின் மன்னவன் கோல்அதிர்க்கும், பண்
பாடல் அதிர்ந்து விடும். [அதிர்ப்பின்

26 மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை, தனக்குப்பாழ்
கற்(று)அறி(வு) இல்லா உடம்பு.

17 மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப் பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையைக் குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

18 மலைப்பினும் வாரணம் தாங்கும், அலைப்பினும்
அன்னேஎன்(று) ஓடும் குழவி, சிலைப்பினும்
நட்டார் கடுங்கும் வினைசெய்யார், ஒட்டார்
உடன்உறையும் காலமும் இல்.

19 நகைநலம் நட்டார்கண் நந்தும் சிறந்த
அவைநலம் அன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனால் பா(டு)எய்தும் ஊர்நலம்
உள்ளானால் உள்ளப் படும்.

20 அலைப்பான் பிறி(து)உயிரை ஆக்கலும் குற்றம்,
விலைப்பாலில் கொண்(டு) ஊன்மிசைதலும் குற்றம்;
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்,
கொலைப்பாலும் குற்றமே ஆம்.

21 கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம் தாய்தனப்
பால்நோக்கி வாழும் குழவிகள் வானத்
துளிநோக்கி வாழும் உலகம், உலக
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று.

22 இரும்பின் இரும்(பு)இடை போழ்ப, பெரும்சிறப்பின்
நீர்உண்டார் நீர்ஆல்வாய் பூசுப, தேரின்
அரிய அரியவற்றால் கொள்ப, பெரிய
பெரியரான் எய்தப் படும்.

23 மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் மால்இருள்
நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர், பெய்யல்
முழங்கத் தளிர்க்கும் குரு(கு)இலை நட்டார்
வழங்கத் தளிர்க்கும்ஆம் மேல்.

24 நாற்றம் உரைக்கும் மலர்உண்மை கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம், தூக்கின்
அகம்பொதிந்த தின்மை மனம்உரைக்கும் முன்னம்
முகம்போல முன்உரைப்ப(து) இல்.

25 மழைஇன்றி மாநிலத்தார்க்(கு) இல்லை, மழையும்
தவம்இலார் இல்வழி இல்லை, தவமும்
அரசன் இலாவழி இல்லை அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

26 எரு(து) உடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி உருவோ(டு)
அறி(வு)உடையான் இல்வாழ்க்கைப் பெண்என்பாள்சே
செறி(வு) உடையான் சேனாபதி. [னை

27 கண்ணில் சிறந்த உறுப்(பு)இல்லை, கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை, மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள் இல்லை ஈன்றாளின்
எண்ணக் கடவுளும் இல்.

29 நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்(பு)அழல் சேர்ந்து
வழுத்த வரம்கொடுப்பர் தேவர், தொழுத்திறந்து
கன்(று) ஊட்ட நந்தும் கறவை, கலம்பரப்பி
நன்(று) ஊட்ட நந்தும் விருந்து.

30 பழிஇன்மை மக்களால் காண்க, ஒருவன்
கெழிஇன்மை கேட்டால்அறிக, பொருளின்
நிகழ்ச்சியால் ஆக்கம் அறிக, புகழ்ச்சியால்
போற்றுதார் போற்றப்படும்.

31 திரிஅழல் காணின் தொழுப விறகின்
எரிஅழல் காணின் இகழ்ப ஒருகுடியில்
மூத்தானைக் கைவிடுப கற்றான்
இளமை பாராட்டும் உலகு.

32 கைத்(து)இலார் நல்லவர் கைத்(து) உண்டாக்காப்பாரி
வைத்தாரின் நல்லர் வறியவர் பைத்(து)எழுந்து [ன்
வைதாரின் நல்லர் பொறுப்பவர், செய்தாரின்
நல்லவர் சிதையா தவர்.

33 மகன்உரைக்கும் தந்தை நலத்தை ஒருவன்
முகன்உரைக்கும் உள்நின்ற வேட்கை அகல்நீர்ப்
பிலத்(து) இயல் புக்கான் உரைக்கும் நிலத்(து) இயல்பு
வானம் உரைத்து விடும்.

34 தேவர் அனையர் புலவரும் தேவர்
தமர் அனையர் ஓர்ஊர் உறைவார் தமர்உள்ளும்
பெற்றன்னர் பேணி ஒழுகுவார் கற்றன்னர்
கற்றாரைக் காதல் அவர்.

35 தாவாத இல்லை பிறந்த உயிர்எல்லாம்,
சாவாது இல்லை வலிகளும் மூவா(து)
இளமை இசைந்தாரும் இல்லை வளமையில்
கே(டு)இன்றிச் சென்றாரும் இல்.

36 கொடுப்பின் அசனம் கொடுக்க விடுப்பின்
உயிர்இடை இட்ட விடுக்க எடுப்பின்
கிளையுள் கழிந்தார் எடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

37 நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்
குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளம்இல் குளத்தின்கீழ் நெல்சாம் பரம்மல்லல்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

38 நல்லார்க்கும் தம்ஊர்என்(று) ஊர்இல்லை நன்னெறிச்
செல்வார்க்கும் தம்ஊர்என்(று) ஊர்இல்லை அல்லாக்
கடைகட்கும் தம்ஊர்என்(று) ஊர்இல்லை தம்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.

39 நீரான் வீ(று)எய்தும் விளைநிலம் நீர்வழங்கும்
பண்டத்தால் பா(டு)எய்தும் பட்டினம், கொண்(டு)ஆளும்
நாட்டான் வீ(று) எய்துவர் மன்னவர் கூத்(து)ஒருவன்
ஆடலால் பாடு பெறும்.

40 கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன
நள்ளாமை வேண்டும் சிறியரோ(டு) யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

41 இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளம்இலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்,
கிளைஞர்இல் போழ்தில் சினம்குற்றம், குற்றம்
தமர்அல்லார் கைஅகத்(து) ஊண்.

42 கள்ளின் இடும்பை களிஅறியும், காப்(பு)இடும்பை
புள்ளினுள் ஓங்கல் அறியும் நிரப்(பு)இடும்பை
பல்பெண்டிர் ஆளன் அறியும் கரப்(பு)இடும்பை
கள்வன் அறிந்து விடும்.

43 மனைக்கு விளக்கம் மடவார், மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்,—மனக்(கு) இனிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு.

44 வால்இழையார் முன்னர் வனப்புஇலார் பா(டு)இலர்,
சாலும் அவைப்படின் கல்லாதான் பா(டு)இலன்,
கற்றான் ஒருவனும் பா(டு)இலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

45 கற்பக் கழிமடம் அஃகும் மடம்அஃகப்
புற்பம் தீர்ந்(து) இவ்வுலகின் கோள்உணரும், கோள்உ
தத்துவம்ஆன நெறிபடரும் அந்நெறி [ணர்ந்தால்
இப்பால்உலகின் இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.

உ

காரி ஆசான்செய்த

சிறுபஞ்ச மூலம்

---

1 ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவோ(டு)
ஒதத இவைஅல ஓர்நால்இட்(டு)—ஒத்த
உறுபஞ்ச் மூலம்தீர் மாரிபோல் கூறீர்
சிறுபஞ்ச மூலம் சிறந்து.

2 படைதனக்கு யானை வனப்(பு)ஆகும், பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்(பு)ஆம்,—நடைதனக்கு
கோடா மொழிவனப்புக்கோற்(கு)அதுவே, சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு.

3 கண்வனப்பு கண்ணோட்டம், கால்வனப்பு செல்லாமை,
எண்வனப்(பு) இத்துணையாம் என்(று) உரைத்தல்—பண்வனப்பு
கேட்டார் நன்(று) என்றல் கிளர்வேந்தன் தன்நாடு
வாட்டான் நன்(று) என்றல் வனப்பு.

4 கொன்(று) உண்பான் நாச்சாம் கொடும்கரிப்போவான் நாச்சாம்-
நன்(று)உணர்வார் முன் கல்லான் நாவும்சாம்-ஒன்றானும்
கண்டுழி நாச்சாம், கடவான் குடிப்பிறந்தான்
உண்டுழி நாச்சாம் உணர்ந்து.

5 சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம், மயிர்தான்;—வலம்படா
மாவிற்குக் கூற்றம்ஆம், ஞெண்டிற்குத் தன்பார்ப்பு,
நாவிற்கு நன்(று)அல் வசை.

6 நாண்இலான் சால்பும், நடைஇலான் நல்நோன்பும்,
ஊண்இலான் செய்யும் உதாரதையும்,—எண்இலான்
சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்,
நா(வு)அகமே நாடின் நகை.

7 பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததிங்(கு) எண்ணி இருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று.

8 பொய்யாமை பொன்பெறினும், கள்ளாமை, மெல்இயலார்
வையாமை, வார்குழலார் நச்சினும்,—நையாமை,
ஓர்த்(து)உடம்பு பேரும் என்(று)ஊன் அவாய் உண்ணானேல்
பேர்த்(து)உடம்பு கோடல் அரிது.

9 தேவரே கற்றவர், கல்லாதார் தேரும்கால்
பூதரே, முன்பொருள் செய்யாதார்—ஆதரே,
துன்பம் இலேம்பண்(டு) யாமே வனப்(பு) உடையேம்
என்பார் இருகால் எருது.

10 கள்ளான்சூ(து) என்றும் கழுமான் கரியாரை
நள்ளான் உயிர்இரங்க நாஆடான்—நள்ளானாய்
ஊன்மறுத்துக் கொள்ளானேல் ஊன்உடம்(பு)எஞ்ஞா
தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து. [ன்றும்

11 பூவாது காய்க்கும் மரமும்உள நன்(று)அறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்—தாவா
விதையாமை நாறுவ வித்(து)உள மேதைக்(கு)
உரையாமை செல்லும் உணர்வு.

12 கள்உண்டல் காணில் கணவர்ப் பிரிந்(து) உறைதல்
வெள்கிலராய்ப்பிறர்இல் சேறல்,—உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமைத்
திறம்அது தீப் பெண்ணின் தொழில்.

13 பெரும்குணத்தார்ச் சேர்மின், பிறன்பொருள்வெளவன்மின்,
கரும்குணத்தார் கேண்மை கழிமின்;—ஒருங்(கு) உணர்
தீச்சொல்லே காமின், வரும்காலன் திண்ணிதே, [ந்து
வாய்ச்சொல்லே அன்று வழக்கு.

14 வான்குருவிக் கூ(டு) அரக்கு வால்உலண்டு கோல்தருதல்
தேன்புரிந்து) யார்க்கும் செயல்ஆகா.—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னார் ஒரோஒருவர்க்(கு)
ஒல்கா(து)ஓர் ஒன்று படும்.

15 வேட்பவன் பார்ப்பான், விளங்(கு) இழைக்குக் கற்(பு)உடைமை
கேட்பவன் கே(டு)இல் பெரும்புலவன்;—பாட்டவன்
சிந்தையான் ஆகும் சிறத்தல், உலகினுள்
தந்தையான் ஆகும் உலகு.

16 இல்இயலார் நல்அறமும், ஏனைத் துற(வு)அறமும்,
நல்இயலின் நாடி உரைக்கும்கால்— நல்இயல்
தானத்தால் போகம், தவத்தால் சுவர்க்கம்ஆம்
ஞானத்தால் வீ(டு)ஆக நாட்டு.

17 மயிர்வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும்,
உகிர்வனப்பும், காதின் வனப்பும்,—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும், வனப்(பு) அல்ல. நூற்(கு)இயைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

18 வருவாய்க்குத் தக்க வழக்(கு)அறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந்(து) ஓம்பித்—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு.

19 வார்சான்ற கூந்தல் வரம்(பு)உயர வைகலும்
நீர்சான்று(று) உயரவே நெல்உயரும்—சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்(கு) அரும்சீர்க் கோஉயரும்,
ஓவா(து) உரைக்கும் உலகு.

20 பொச்சாப்புக் கேடு, பொருள்செருக்குத் தான்கேடு,
முற்றாமை கேடு முரண்கேடு;—தெற்றத்
தொழில்மகன் தன்னோடு மாற்(று)ஆயின் என்றும்
உழுமகற்குக் கேடின் உரை.

21 கொல்லாமை நன்று, கொலைதீ(து), எழுத்தினைக்
கல்லாமை தீது, கதம்தீது.—நல்லார்
மொழியாமை முன்னே முழுதும் இளைஞர்
பழியாமை பல்லார் பதி.

22 மக்கள் பெறுதல் மடன்உடைமை மா(து)உடைமை
ஒக்க உடன்உறைதல் ஊண்அமைவு—தொக்க
அவ்விலை அல்லாமை பெண்மகளிர்க்(கு) ஐந்து
கலைமகளைத் தாழ்க்கும் மருந்து.

23 பொன்பெறும் கற்றான், பொருள்பெறும் நற்கவி
என்பெறும் வாதி இசைபெறும்—முன்பெறக்
கல்லார்கற் றார் இனத்தார் அல்லார் பெறுபவே
நல்லார் இனத்து நகை.

24 தன்னிலையும் தாழாத் தொழில்நிலையும், துப்(பு)எதிர்ந்தார்
இன்னிலையும், ஈ(டு)இல் இயல்நிலையும்,—துன்னி
அளந்(து)அறிந்து செய்வான் அர(சு)அமைச்சன் யாதும்
பிளந்(து) அறியும் பேர்ஆற்றல் ஆன்.

25 நன்புலத்து வைஅடக்கி நாளும்மா டோபோற்றிப்
புன்புலத்தைச் செய்(து)எருப் போற்றியபின்—இன்புலத்தின்,
பண்கலப்பை என்றிவை பாற்படுப் பான்உழவோன்
நுண்கலப்பை நூல்ஓது வார்.

26 கொண்டான், கொழுநன், உடன்பிறந்தான், தன்மாமன்,
வண்(டு)ஆர்பூந் தொங்கல் மகன்தந்தை—வண்தாராய்!
ஆப்(பு)ஆர்பூங் கோதை அணிஇழையை நன்(கு)இயை
காப்பார் கருதும் இடத்து. [யக்

27 நீர்அறம் நன்று நிழல்நன்று தன்இல்உள்
பார்அறம் நன்றுபாத்(து) உண்பானேல்—பேர்அறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றும்ஆம் சால உடன்.

28 குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்(து)
உளம்தொட்(டு) உழுவயல் ஆக்கி—வளம்தொட்டுப்
பாகு படும்கிணற்றோ(டு) என்(று)இவ்ஐம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத்(து) இனிது.

29 போர்த்தும், உரிந்திட்டும், பூசியும் நீட்டியும்,
ஓர்த்(து)ஒரு பால்மறைத்(து) உண்பாது மேய்—ஓர்த்த
அறம்ஆம்மேல் சொல்பொறுக்க அன்றிறல் கலிக்கண்
துறவறம் பொய் இல்அறமே வாய்.

30 கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் தொழிக்குங்கால்-கொன்றத
அட்டான் இடஉண்டான் ஐவரினும் ஆகும்எனக் [னை
கட்(டு)எறிந்த பாவம் கருது.

31 சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்
உறைக்கிடந்தார் ஒன்(று)இடைஇட்டு உண்பார்- பிறைக்கிடந்து
முற்றனைத்தும் உண்ணு தவர்க்(கு)ஈந்தார் மன்னவராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து.

32 வலிஅழிந்தார் மூத்தார் வடக்(கு)இருந்தார நோயால்
நலி(பு)அழிந்தார் நாட்டுஅறைபோய் நைந்தார்-மெலிவுஒழிய
இன்னவராம் என்னாராய் ஈந்த ஒருநூற்று
மன்னவராச் செய்யும் மதித்து.

33 சிக்கர் சிதடர் சிதலைப்போல் வாய்உடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்கால்—தொக்க
அருநோய்கள் முன்னாளில் தீர்த்தாரே இந்நாள்
ஒருநோயும் இன்றிவாழ் வார்.

34 பஞ்சப்பொழுது பாத்(து)உண்பான் காவாதான்
அஞ்சா(து)உடைபடையுள் போந்(து)எறிவான்—எஞ்
உண்பதுமுன் ஈவான் குழவி பலிகொடுப்பான் [சாதே
எண்பதின் மேலும்வாழ் வான்,

35 சத்தம்மெய்ஞ் ஞானம் தருக்கம் சமயமே
வித்தகர் கண்டவீ(டு) உள்ளிட்டாங்(கு)—அத்தகத்
தந்தஇவ் வைந்தும் அறிவான் தலையாய
சிந்திப்பின் சிட்டன் சிறந்து.

36 பத்தினி சேவகன் பொத்(து)இல் கடும்தவசி
பொத்(து)இல் பொருள்திறத்துச் செவ்வியான்-பொத்தின்றி
வைத்தார் வழக்கும் சான்றவர்தம் செம்மை
செத்தால் அறிக சிறந்து.

37 தக்க(து) இளையான் தவம்செல்வன் ஊண்மறுத்தல்
தக்கது கற்(பு)உடையாள்வனப்புத்—தக்க(து)
அழல்தண்என் தோளான் அறி(வு)இவள் ஆயின்
நிழற்கண் முயி(று)ஆய் விடும்.

38 நாண்எளிது பெண்மை, நகைஎளிது நட்டானேல்
எண்எளிது சேவகன் ஏல்பெரியார்ப்—பேண்எளிது
கொம்பு மறைக்கும் இடையாய்! அளியன்மீ(து)
அம்பு பறத்தல் அரிது.

39 கழிந்தவை தான்இரங்கான், கைவாரா நச்சான்,
இகழ்ந்தவை இன்(பு)உறான் இல்லார்—மொழிந்தவை
மென்மொழியால் உள்நெகிழ்ந்(து) ஈவானேல் விண்ணோரால்
இன்மொழியால் ஏத்தப் படும்.

40 தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதல் பா(டு)உணர்ந்து—தான்பிறரால்
சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ்க எனவாழ்தல் நன்று.

உ

கணிமேதையார் இயற்றிய

ஏலாதி.

வேதநெறிப்பட்டவர் வனப்பு.

1 சென்ற புகழ்செல்வம் மீக்கூற்றம் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை—என்றும்
வழிவந்தார் பூங்கோதாய்! ஆறும் மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

எவ்வுயிர்க்கும் தாயானவன்.

2 நிறைஉடைமை நீர்மை உடைமை கொடையே
பொறைஉடைமை பொய்ம்மை புலாற்கண்—மறைஉடைமை
வேய்அன்ன தோளாய்! இவைஉடையான் பல்உயிர்க்கும்
தாய்அன்னன் என்னத் தகும்.

பண்டிதராய் இன்புறுபவர்.

3 கற்றாரைக் கற்ற(து) உணரார் எனமதியார்
உற்றாரை அன்னணமே ஓராமல்—அற்றார்கட்(கு)
உண்டி உறையுள் உடுக்கை இவைஈந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

விரும்பிப் பார்க்கத் தகாதவை.

4 கொலைக்களம் வார்க்குத்துச் சூ(து)ஆடும் எல்லை
அலைக்களம் போர்யானை ஆக்கும்—நிலைக்களம்
முச்சாரிகைஒதுங்கும் ஓரிடத்தும் இன்னவை
நச்சாமை நோக்காமை நன்று.

துறவிகள் இயல்பு.

5 விளையாமை உண்ணாமை ஆடாமை ஆற்ற
உளையாமை உட்குடைத்தா வென்று—களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய்! நோக்கின் இவைஆறும்,
பாற்பட்டார் கொண்(டு)ஒழுகும் பண்பு.

நன்மையானவை.

6 கண்போல்வார்க் காயாமை கற்றார் இனம்சேர்தல்,
பண்போல் கிளவியார்ப் பற்றாமை—பண்போலும்,
சொல்லார்க்(கு) அருமறை சோராமை சிறி(து)எனினும்,
இல்லார்க்(கு) இடர்தீர்த்தல் நன்று.

அமைச்சனாவான் இலக்கணம்.

7 குடிஓம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடிஓம்பும் ஆற்றல் உடைமை—முடிஓம்பி
நாற்றம் சுவைகேள்வி நல்லார் இனம்சேர்தல்
தேற்றானேல் தேறும் அமைச்சு.

பகையாசிலாது வாழுமுறை.

8 போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள்
சோகம் படும்சூதே சொல்வன்மை—சோகக்
கடும்கதத்துத் தண்டம் அடங்காமை காப்பின்,
அடும்கதம்இல் ஏனை அரசு.

மீக்கவனுக்குரிய ஏழ குணம்.

9 கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்
செல்லான் சிறியார்இனம்சேரான்-சொல்லும் [மேல்
மறையில் செவிஇலன், தீச்சொற்கள் மூங்கை
இறையில் பெரியாற்(கு) இவை.

விண்ணவரினுமுயர்ந்த மண்ணவன்.

10 மின்னேர் இடையார்சொல் தேறான், விழை(வு)ஓரான்,
கொன்னே வெகுளான், கொலைபுரியான்,—பொன்னே!
உறுப்(பு) அறுத்(து) அன்ன கொடைஉவப்பான் தன்னி [ன்
வெறுப்(பு) அறுத்தான் விண்அகத்தும் இல்.

வீடு அமைய முயற்சித்தல்

11 இளமை கழியும், பிணிமூப்(பு) இயையும்,
வளமை வலிஇவை வாடும்,—உளநாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி.

தீர்ந்தாற்போல் தீரா வருவன.

12 பா(டு)அகம் சாராமை, பாத்திலார் தாம்விழையும்
நாடகம் சாராமை நாடும்கால்—நாடகம்
சேர்ந்தால் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போல் தீரா வரும்.

தூதர் இலக்கணம்.

13 மாண்(டு)அமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்(டு)அமைந்த கல்வியே சொல்ஆற்றல்,—பூண்(டு)அமைந்த
காலம்அறிதல் கருதும்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்.

தேவாதிதேவனைத் தெளியப்படுபவன்.

14 உரையான் குலன்குடிமை ஊனம் பிறரை [ய்ப்
உரையான் பொருளொடு வாழ்(வு) ஆயுள்—உரையானை
பூஆதி வண்டுதேர்ந்(து) உண்குழலாய்! ஈத்(து)உண்பான்
தேவாதி தேவனைத் தேறு.

இந்திரபதவி எய்தக்கூடியவன்.

15 பொய்உரையான், வையான், புறம்கூறான், யாவரையும்
மெய்உரையான் உள்ளனவும் விட்(டு) உரையான்,-எய்உரையான்
கூந்தல்மயில் அன்னாய்! குழீஇயவன் விண்ணோர்க்கு
வேந்தன் ஆம் இவ்உலகம் விட்டு.

அரசனும் பேறடைபவன்.

16 துறந்தார், துறவாதார், துப்(பு)இலார், தோன்று(து)
இறந்தார், ஈ(டு)அற்றார், இளையார்.—சிறந்தவர்க்கும்
பண் ஆளும் சொல்லாய்! பழியில்ஊண் பாற்படுத்தான்
மண் ஆளும் மன்னனாய் மற்று.

தேவரால் விரும்பப்படுபவர்.

17 கால்இல்லார் கண்இல்லார் நாஇல்லார் யாரையும்
பால்இல்லார் பற்றிய நூல்இல்லார்—சாலவும்
ஆழப் படும்ஊண் அமைத்தார் இமையவரால்
வீழப் படுவார் விரைந்து.

அருமையும் எளிமையுமானவை.

18 சாவ(து) எளிது அரிது சான்றாண்மை நல்லது
மேவல் எளி(து)அரிது மெய்போற்றல்-ஆவதன்கண்
சேறல் எளிது நிலைஅரிது தெள்ளியராய்
வேறல் எளிது(து) அரிது சொல்.

நெறிநூல் கற்கவேண்டாதவன்.

19 குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈ(டு)அற் றவர்க்(கு)ஈவான் ஆயின் நெறிநூல்கள்
பாடுஇறப்ப பன்னும் இடத்து.

அரசனாய்ப் புகழ் அடைபவன்.

20 பொய்யான்பொய் மேவான் புலால் உண்ணான் யாவரை
வையான் வழிசித்து வால்அடிசில்—ஐயாதே [யும்
ஈத்(து)உண்பான் ஆகும் இருங்கடல்சூழ் மண்அரசாய்ப்
பாத்(து) உண்பான் ஏத்(து)உண்பான் பாடு.

அரசசம்பத்திற் சிறப்பவன்.

21 களியான்கள் உண்ணான், களிப்பாரைக் காணான்,
ஒளியான் விருந்திற்(கு) உலையான்,—எளியாரை
எள்ளான் ஈத்(து) உண்பானேல் ஏதம்இல் மண் ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

தபோசம்பத்துற்று வாழ்பவன்.

22 யானை குதிரைபொன் கன்னியே ஆன்நிரையொ(டு)
ஏனை ஒழிந்த இவைஎல்லாம்—ஆன்நெய்யால்
எண்ணாய் மாதவர்க்(கு) ஊண்ஈந்தான் வைசிர
வண்ணனாய் வாழ்வான் வகுத்து.

சுற்றத்தோடின்புறுவோன்.

23 எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்(து)ஆடை
வள்ளே துணியே இவற்றொடு—கொள்என
அன்புற்(று) அசனம் கொடுத்தான், துணையினோ(டு)
இன்புற்று வாழ்வான் இயைந்து.

மன்னரா யின்புறுபவர்.

24 இல்இழந்தார் கண்இழந்தார் ஈண்டியசெல் வம்இழந்தார்
நெல்இழந்தார் ஆன்நிரை தான்இழந்தார்க்(கு)—எல்உழ
பண்ணிஊண் ஈந்தவர் பல்யானை மன்னராய் [ந்து
எண்ணிஊண் ஆர்வார் இயைந்து.

உதவிபுரிவார் பேறு.

25 ஈன்றார்ஈன் கால்தளர்வார் சூலார் குழவிகள்
மான்றார் வளியால் மயங்கினார்க்(கு)—ஆனார்என்(று)
ஊண்ஈய்த்(து) உறுநோய் களைந்தார்; பெரும்செல்வம்
காண்ஈய்த்து வாழ்வார் கலந்து.

கைதியாதியோர்க் குதவி.

26 தளைஆளர் தாப்பாளர் தாழ்ந்தவர் பெண்டிர்
உளைஆளர் ஊண்ஒன்றும் இல்லார்—கிளைஞராய்
மாஅலந்த நோக்கினாய்! ஊண்ஈந்தார் மாக்கடல்சூழ்
நாவலம்தீ(வு) ஆள்வாரே நன்கு.

நோயாளர்க் குதவி.

27 கரும்சிரங்கு வெண்தொழுநோய் கல்வளி காயும்
பெரும்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்(கு)—அரும்சிரமம்
ஆற்றிஊண் ஈத்(து)அவை தீர்த்தார்; அரசாய்ப்
போற்றிஊண் உண்பார் புரந்து.

மன்னனாய்ப் பலகலை ஆய்பவன்.

28 வணங்கி வழிஒழுகி மாண்டார்சொற் கொண்டு
நுணங்கியநூல் நோக்கி நுழையா—இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழிஇல்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.

சாபம்போற் சார்பவை.

29 பெருமை புகழ்அறம் பேணாமை சீற்றம்
அருமைநூல் சால்(பு)இல்லார் சாரின்—இருமைக்கும்
பாவம் பழிபகை சாக்காடே கே(டு) அச்சம்
சாபம்போல் சாரும் சலித்து.

கல்வி பயில்வார்க் குத்விரில்.தபு

30 ஊண் ஒடு கூறை எழுத்(து) ஆணி புத்தகம்
பேண் ஒடும் எண்ணும் எழுத்து(இவை)—மாண் ஒடு
கேட்(டு)எழுதி ஓதிவாழ் வார்க்(கு)ஈந்தார் இம்மையான்
வேட்(டு)எழுத வாழ்வார் விரிந்து.

வீடடையக் கூடியவர்.

31 உயர்ந்தான் தலைவன்என்(று) ஒப்புடைத்தான்நோக்கி
உயர்ந்தான் நூல்ஓதி ஒடுங்கி—உயர்ந்தான்
அருந்தவம் ஆற்றச் செயின்வீடு(ஆம்)என்றார்
பெரும்தவம் செய்தார் பெரிது.

முத்தியுலகியல்பு.

32 பொய்தீர் புலவர் பொருள்புரிந்(து) ஆராய்ந்த
மைதீர் உயர்கதியின் மாண்(பு)உரைப்பின்—மைதீர்[(று)
சுடர்இன்று, சொல்இன்று மா(று)இன்று சோர்(வு)இன்
இடர்இன்(று) இனிதுயிலும் இன்று.

நரக இயல்பு.

33 கூர்அம்பு வெம்மணல் ஈர்மணி தூங்கலும்
ஈரும் புகைஇருளோ(டு) இருள்நூல்— ஆராய்ந்(து)
அழிகதி இம்முறையான் ஆன்றார் அறைந்தார்
இழிகதி இம்முறையான் ஏழு.

அன்புடையார் இயல்பு.

34 சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்(வு)
நோதல் பிரிவில் கவறலே—ஓதலின் [உவத்தல்
அன்(பு)உடையார்க்(கு) உள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

உயிரின் பலதொழில்.

35 எடுத்தல் முடக்கல் நிமிர்த்தல் நிலையே
படுத்தல்ஒ(டு) ஆடல் பகரின்—அடுத்(து)உயிர்
ஆறு தொழில்என்(று) அறைந்தார் உயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து.

தன்மனையில் தகவாழ்வோன்.

36 நடப்பார்க்(கு) ஊண் நல்ல பொறைதாங்கினார்க்(கு)ஊண்
கிடப்பார்க்(கு)ஊண் கேளிர்க்(கு)ஊண் கே(டு)இன்(று)உடற்சார்ந்
வானகத்தார்க்(கு)ஊணே மறுதலைபார்க்(கு)ஊண் அமைத்தான் (த
தான்அகத்தே வாழ்வான் தக.

உண்மைவனப்பு ஈதெனல்.

37 இடைவனப்பும் தோள்வனப்பும் ஈட்டின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்(பு)அல்ல எண்ணொ(டு)
எழுத்தின் வனப்பே வனப்பு.

மறுமைச்சுகந்தேடியவர்.

38 தாய்இழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி
வாய்இழந்த வாழ்வினார் வாணிகம்—போய்இழந்தார்
கைத்(து)ஊண் பொருள்இழந்தார் கண்இலவர்க்(கு) ஈந்
வைத்து வழங்கிவாழ் வார். [தார்

புலையாளர் முதலியோர்க்குதவி.

39 புலைஆளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்(கு)இல்
நிலைஆளர் நீர்மை இழந்தார்—தலைஆளர்க்(கு)
ஊண்கொடுத்(து) ஊற்றாய் உதவினார் மன்னராய்க்
காண்கொடுத்து வாழ்வார் கலந்து.

கொடை முதலியவற்றின் பலன்.

40 ஒல்லுவ நல்ல உருவவேல் கண்ணினாய்!
வல்லுவ நாடி வகையினால்—சொல்லின்
கொடையினால் போகம், சுவர்க்கம் தவத்தால்,
இடையாத் தவத்தினால் வீடு.

உ

மதுரைக் கூடலூர்க்கிழார் இயற்றிய
முதுமொழிக்காஞ்சி.

1. சிறந்தபத்து.

1 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
ஓதலின் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.

2 மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை.
3 வண்மையின் சிறந்தன்று வாய்மை உடைமை.
4 இளமையின் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
5 குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று.

2. அறிவுப்பத்து.

6 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப.

7 ஈரம் உடைமை ஈகையின் அறிப.
8 சோரா நல்நட்(பு) உதவியின் அறிப.
9 அறிவு சோர்(வு) உடைமையின் பிறிதுசோர்வும் அறிப.
10 சீர்உடை ஆண்மை செய்கையின் அறிப.

3. பழியாப்பத்து.

11 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
யாப்(பு) இலோரை இயல்புகுணம் பழியார்.

12 நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.

13 பெருமை உடையதன் அருமை பழியார்.

14 வறியோன் வள்ளியன் அன்மை பழியார்.

15 சிறியார் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார்.

4. துவ்வாப்பத்து.

16 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
பழியோர் செல்வம் வறுமையின் துவ்வாது.

17 நாண்இல் வாழ்க்கை பசித்தலின் துவ்வாது.

18 கொண்டுகண் மாறல் கொடுமையின் துவ்வாது.

19 அறி(வு)இலி துணைப்பாடு தனிமையின் துவ்வாது.

20 தான்ஓர் இன்(பு)உறல் தனிமையின் துவ்வாது.

5. அல்லபத்து.

21 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
நீர் அறிந்(து) ஒழுகாதாள் தாரம்அல்லள்.

22 நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்.

23 தேராமல் கற்றது கல்வி அன்று.

24 அறத்(து)ஆற்றின் ஈயா(த)து ஈகை அன்று.

25 திறத்(து)ஆற்றின் நோலா ததுநோன்(பு) அன்று.

6. இல்லைப்பத்து.

26 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
மக்கள் பேற்றின் பெறும்பே(று) இல்லை.

27 உரைஇலன் ஆதலின் சாக்கா(டு) இல்லை.

28 நசையின் பெரிய(து)ஓர் நல்குர(வு) இல்லை.
29 இசையின் பெரியதுஓர் எச்சம் இல்லை.
30 இரப்போர்க்(கு) ஈதலின் எய்தும் சிறப்(பு) இல்லை.

7. போய்ப்பத்து.

31 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
பேர்அறி விஞேன் இனிது வாழாமை பொய்.

32 கள்உண் போன்சோர்(வு) இன்மை பொய்.
33 உறவினைக்(கு) அயர்வோன் உயர்வுவேண்டல் பொய்.
34 காலம் அறியாதோன் கைத்(து)உறல் பொய்.
35 பொருள்நசை வேட்கையான் முறைசெயல் பொய்.

8. எளியபத்து.

36 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
புகழ்வெய் யோர்க்குப் புத்தேள்நா(டு) எளிது.
37 துன்பம் வெய்யோர்க்(கு) இன்பம் எளிது.
38 உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது.
39 பாரம்வெய் யோர்க்குப் பாத்தூண் எளிது.
40 பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி எளிது.

9. நல்கூர்ந்தபத்து.

41 ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
முறைஇல் அரசன் நாடுநல் கூர்ந்தன்று.
42 தற்போற் றுவழிப் புலவிநல் கூர்ந்தன்று.
43 அகம் வறியோன் நண்ணல் நல்கூர்ந்தன்று.
44 முதிர்(வு) உடையோன் மேனி அணிநல் கூர்ந்தன்று.
45 நட்(பு)இல் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று.

10. தண்டர்ப்பத்து.

46 ஆர்கலி உகைத்து மக்கட்(கு) எல்லாம்
ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான்.
47 கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.
48 வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.
49 மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான்.
50 ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்.

உ

இராமபாரதியார் இயற்றிய
ஆத்திசூடி வெண்பா.

1 இந்துமதி விற்றும் அலைந்(து) ஈனனுக்(கு) ஆள் ஆகி அரிச்
சந்திரனே தன்நிலைமை தப்பாதான்.—அந்த
மனுநெறிதேர் புன்னை வனநாதா! பூமி
யினில்இயல் வதுகர வேல்.

2 செய்யபுகழ் விக்கிரமா தித்தன் ஒரு தட்டாரப்
பையல் உறவுபற்றிப் பட்டதனால்—வையம்
மணக்கும்சீர் புன்னைவன நாதா! நீயும்
இணக்கம் அறிந்(து) இணங்கு.

3 காலைதுயில் சீலம்போம் கண்டபகல் ஆக்கம்போம்
மாலைதுயில் நோயாம் வகைஅறிந்து—ஞாலம்அதில்
புண்ணியகா லம்தெரிந்தே புன்னை வனநாதா!
எண்ணி அனந்தல் ஆடேல்.

4 தண்டமிழ்க்காக் கம்பருக்குத் தாம்அடிமை என்று தொண்டை
மண்டலத்தார் ஏட்டில் வரைந்ததுபோல்-எண்திசைக்கும்
பொன்னான புன்னைவன பூபாலா! தென்பாகை
மன்னா!! கிழமைபட வாழ்.

5 ஈசன் உமைமணத்தி லேவடதிக்(கு) ஆழ்ந்த(து)எனக்
காசினிசீர் ஆகக் கலசமுனி—வாசம்அதால்
செய்ததுபார் புன்னைவன தீரனே! அப்படிச்சீர்
எய்தும்சான் றோர்இனத்(து) இரு.

6 நித்தியத்தைக் கேட்கப்போய் நித்திரைஎன் றேகுழறிப்
புத்திஅற்ற கும்பகர்னன் பொன்றினன்பார்-மத்தமத
குன்றம்போல் புன்னைவனக் கொற்றவா! பாகைமன்னா!!
என்றும்சோற் சோர்வு படேல்.

7 எல்லா மதத்திற்கும் எவ்உயிர்க்கும் நீர்நிழல்போல்
நல்லா தரவே நயந்(து)அருளி—வல்ஆண்மை
சூழ்தேசு புன்னைவனத் தோன்றலே!. நீயும்என்றும்
வாழ்தேசத் தோ(டு)ஒத்து வாழ்.

8 பண்டு துரோணன் பழமைஎண்ணைப் பாஞ்சாலன் [றோ
மண்(டு)அமரில் அர்ச்சுனனால் வீ(று)அழிந்தான்-கண்ட(து)அன்
பொன்ஆளும் புன்னைவன பூபாலா! தன்னை அறிந்(து)
எந்நாளும் தோன்மைமற வேல்.

9 நா(டு)ஓடும் போது நடு(வு)ஓட வேண்டும்என்று
தேடும் தருமர்சொன்ன சீர்அதனால்—நீடு
பொருந்துபுகழ் புன்னைவன பூபாலா! நன்றாய்த்
தெரிந்துநா(டு) ஒப்பன செய்.

10 நீலிபழி யைக்களைந்து நின்மரபில் வேளாளர்
சூலிமுது கிற்சுடவே சோ(று)இட்டு—மேலான
ஞாயம்பார் புன்னைவன நாதனே! அப்படிபோல்
நீயும்மிகப் பீடுபெற நில்.

11 தலம்தீர்த்தம் தானம் தவம்செய்சந் தானம்
நலம்பெறலால் தேவர்எல்லாம் நாடி—நிலம்துதிப்பார்
மந்திரியே! புன்னைவன நாதா!! ஆதலினால்
புந்தியின்நீ பூமிவிரும் பு.

12 தந்தை இரணியனைத் தள்ளிப் பிரக்லாதன்
சிந்தையில்மா யன்துணையே தேடினான்—சந்ததமும்
நட்(பு)அறியும் புன்னைவன நாதமகி பா!உலகிற்
குட்பெரியா ரைத்துணைக் கொள்.

13 காகம் பசித்துவரக் கார்இருளின் நன்மைசெய்த
கூகை பகற்பட்ட கொடுமையினால்—வாகு
புனைதாமா! புன்னைவன பூபாலா!! மோசம்
எனமாற்றா னுக்(கு)இடங்கொ டேல்.

14 வள்ளுவரைக் கல்விஅன்றோ? வண்தமிழ்ச்சங் கம்செயிக்கத்
தெள்ளுதமிழ் நூல்உதவி செய்த(து)எல்லாம்-உன்ன(து)அன்றோ
சந்திரனே! புன்னைவனத் தாடாளா!! பேர்அறிவாம்
புந்தியில் வித்தைவிரும் பு.

15 தருமர்உயர் வேள்வி தனில்சிசுபா லன்பார்த்(து)
அரியைநிந்தை சொல்லி அழிந்தான்—தெரிவதன்றோ
பார்புகழும் புன்னைவனப் பார்த்திபா! மேலோரைச்
சீர்மைதப்பி வெட்டெனப்பே சேல்.

16 செய்யமுகம் வாய்கைகால் தேகசுத்தி செய்துமெய்யில்
தூய்யவெண்நீ(று) இட்(டு)அரனைத் தோத்திரம்செய்(து)-உய்யும்
மாஎய்தும் புன்னைவன மன்னவா! மைஇரவி [வகை
லேலைவ கறைத்துயில் எழு.

உ

பட்டினத்தடிகள் தாயார்

தகனகிரியைப் புலம்பல்.

ஐஇரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்(து)எடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கலசப்பால் தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்அளவும்
அந்திபகல் ஆய்ச்சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ?
எரியத் தழல்மூட்டு வேன்.

அள்ளி இடுவ(து) அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்(து)ஆடி என்தன்
மகனே எனஅழைத்த வாய்க்கு.

வெந்தாளோ? சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ? என்னை மறந்தாளோ?—சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்துஎன்
தன்னையே ஈன்(று)எடுத்த தாய்.

வீற்றிருந் தாள் அன்னை, வீதி தனில்இருந்தாள்,
நேற்(று)இருந்தாள், இன்றுவெந்து நீ(று)ஆனாள்,-பால்தெ
எல்லீரும் வாருங்கள் ஏ(து)என்(று) இரங்காமல் [ளிக்க
எல்லாம் சிவமயமே ஆம்.

காலன் வருமுன்னே, கண்பஞ்(சு) அடைமுன்னே,
பால்உண் கடைவாய் படுமுன்னே,—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே, ஊரார் சுடுமுன்னே.
குற்றாலத் தானைநீ கூறு.

பஞ்சதந்திரப் பாடல்.

மித்திரபேத தந்திரம்

காகம் நாகத்தைக்கொன்ற கதை

சோடுறு சினையில், காகம் கூடுவைத்(து)அனேக காலம்
பேடொடு கூடிவாழும் பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம்(பு) ஒன்றங்(கு) அதுபெறு முட்டைஎல்லாம்,
நாடியே குடித்துப் போட, நலிந்(து)உளம்மெலிந்து, வாடி,

தன்உயிர்ப் பாங்கனை சம்புகன் அருகுபோய், இங்(கு)
என்னசெய் குவன்நான் என்ன, இதைக்கொல அரிதோ? நீபோய்,
மன்னவன் தேவிஆடும் மஞ்சனச் சாலைபுக்குப்
பொன்அணி கொண்டு வந்து, போடுக பொந்தில் என்ன;

காகம்அப் படியே செய்யக் காவலன் ஏவல்ஆளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்த்தனர். ஈரும் போதில்,
நாகம்அங்(கு) இருந்து சீற, நறுக்கினர் இருதுண்டாக.
ஆகையால், உபாயத் தாகா(து) இலையென, அறையும்பின்னும்.

சிங்கத்தை முயல் கொன்ற கதை.

குறுமுயல் சிங்கம் தன்னைக் கொன்ற(து) ஒன்(று) உண்(டு) எ(து) என்
செறியும்ஓர் காட்டிலே,ஓர் சிங்கம்உண்(டு). அந்தக்காட்டில், (னில்
உறுவிலங்(கு) அனைத்தும் வேட்டை ஆடிஊன் மிகவும்தின்று,
வெறிகொடு திரியும்நாளில், விலங்(கு) எலாம் ஒருங்குகூடி;

ஆண்இளம் சிங்கமே!உன் அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்; விதத்தினில் தினம்ஒன்றாக
ஊண்உனக்(கு) அளிப்போம் என்ன, உண்மையாய்க்கொண்டுசிங்கம்
ஆணையும் இட்(டு)ஒவ் வொன்றாய் அருந்திஅங்கு இருக்கும்நாளில்;

தனிமுயல் ஒன்றுக்(கு), ஓர்நாள் தன்முறை வருதல்ஓடும்
இனிஅது விடாது நம்மை எனினும்,ஓர் எடுப்(பு)எடுத்து
வினையைஇப் போதுசெய்து வென்றுநாம் உய்ந்தோம் ஆகில்;
நனிவிலங்(கு) அனைத்தும் உய்யும், நமக்கும்நற் புகழ்உண்(டு)என்றே;

கருதிஅச் சிங்கத் தின்தன் கடும்பசி "வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி மன்னன்நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழம் எனும் பிந்துவ(து) இல்லை. பிந்தி
வருவ(து)என் உரைநீ" என்று, மனம்தனில் சினந்துகூற;

"ஐய!நின் பசித்தவேளைக்(கு) அடியனேன் வந்தேன். ஆங்(கு)ஓர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவிஅங்(கு) ஒளித்(து) இருந்தேன்,
பையவே சிங்கம் ஆங்(கு)ஓர் பருமுழை புகுந்த பின்னர்,
துய்யஉன் பக்கல் வந்தேன். சுவாமி!" என்(று)இறைஞ்சி நிற்க;

சிங்கம் "நாம் அல்லால் வே(று)ஓர் சிங்கம்நீ கண்டாய் ஆகில்,
அங்(கு)அதைக் காட்டுவா" என்(று)அழைத்தலும், அழைத்துப்போய்
பங்கமும் புனலும் சேர்ந்த பாழ்ந்தூர(வு) அதனைக்காட்ட (ஓர்
அங்(கு)அதை எட்டிப் பார்த்த(து) அதன்நிழல் உருவம்தோன்ற;

தன்உரு நிழலைத் தானே சத்துரு என்று பாய்ந்(து)
துன்னுபங் கத்(து)அழுந்தித் துளங்கியே உயிர்இழந்த(து).

என்னலால்; உபாயத் தாலே யாவையும் வெல்ல லாம்என்(று):
இன்னம் ஓர் நண்டு கொக்கை ஈர்ந்த(து)ஓர் கதையும் சொல்லும்.

சுகிர்லாப தந்திரம்

நரியால் மான் வலையிற்பட்ட கதை

வளப்உறு மகத நாட்டில், சண்பக வனத்தில், மன்னி
உளம்மகிழ் கொடியும், மானும் உறவுகொண்(டு) இருக்குங்காலை;
கொளும்இளம் புல்லால் மான்மெய் கொழுத்திடும் இயல்புநோக்கி,
களம்மிகு நரிஒன்(று) உள்ளக் கபடத்தால், கொல்ல எண்ணி;

துன்னிய மான்பால் சென்(று)"என் நண்ப!நீ சுகமோ என்ன,
அன்னதைக் கேட்டு,"நீயார்? என்றலும், " அரியோய்! யான்இக்
கொன்உறு வனத்தில் வாழ்வேன், க்ஷுத்திர புத்தி என்பேர்,
பன்னிய கிளை ஒன்(று) இல்லாப் பாவியாய்த் திரிந்து நின்றேன்.

இன்(று)உனைக் கண்டுநெஞ்சத்(து) எய்தினேன் உவகை,இப்போது
உன்திருப் பணிசெய்(து) உன்பால் உற்றிட விழைந்தேன்," என்ன
நன்(று)என இசைந்(து) இரண்டும் நண்ணுசண் பகத்தின் கீழே
துன்றின அதன்மேல் உற்ற சுபுத்திஆம் காகம் கண்டே,

மித்திர மானே! நின்பால் மேவினோன் யாவன்?என்னப்,
பத்தியில் சிநேகம் செய்யப் படர்ந்தசம் புகன்என்(று) ஓத
அத்தகை யான்தன் செய்கை குலத்தொடும் ஆரா யாமல்,
மத்தியத் திடநாம் ஈகை தகாதது, வழங்கல் செய்தால்;

தழுவுறும் ஒருபூனைக்குச் சரற்கவன் என்றுகூறும்
கழு(கு) இடம் கொடுத்(து) இறந்த கணக்குப்போல் முடியும்என்ன
வழுவில்அக் கதை எனக்கு மரபினில் சொல்க என்று
பழு(து)அறு மான் வினவப் பகர்தரும் காகம் அன்றே.

உ

நெல்லூர்வீரகவிராசரெனும் ஆசுகவிராசர்

அருளிய

அரிச்சந்திரபுராணம்

சூழ்வினைக்காண்டம்.

விஸ்வாமித்திரர், அரிச்சந்திரன் நீசமகளிரை மணக்க மறுத்தது கண்டு, மன்னன் வாய்மொழிப்படியே நாடு முதலியவை கைக்கொள்ளுதல்.

1 "கண்ணை வேண்டினும் ஈகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்,
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன், யான்" என்று பேசினான்.

2 மன்னர் மன்னன் உரைத்திட மாதவன்
அன்னதே நமக்(கு) ஆம்என்(று) அவாஉறீ இச்
சொன்ன தேஅமை யும்கடல் சூழ்புவி
என்ன தேஎன்(று) எழுந்(து)எழுந்(து)ஆடினான்.

3 மருவும் நாடும் வளநக ரும்பெரும்
திருவும் ஈகுவன் என்றனை செவ்வியோய்!
தருவன் என்ற மொழிதவ றுமல்உன்
அரசு(சு)அ ளிக்கின் அமையும்என ஹச்சொனான்.

4 அந்த ணாளனை நோக்கிஅவ் அண்ணலும்
உந்தம் மக்கள் உறுநலன் வேண்டிலேன்.
எந்தம் நாடும், இருநிதிக் குப்பையும்,
தந்த னன்மொழி தப்புவ(து) இல்என்றான்.

5 பாரை வார்த்தையி னல்தரல் பாலதோ
தாரை வார்எனக் கௌசிகன் சாற்றிட,
நாரை வாய்கயல் பாயும் நறும்தட
நீரை வார்த்தனன் நீபுவி ஆள்கென,

6 "வையம் நின்னது; மாநகர் நின்னது;
வெய்ய வாசியும் வேழமும் நின்ன;பொற்
செய்ய தேர்களும், செல்வமும், சேவிக்கும்
தையலார்களும், தானையும், நின்னவே."

7 என்று மன்னன் இயம்பி இறைத்தநீர்
அன்று கௌசிகன் அங்கையின் ஏற்றபின்,
நின்ற மாதவர் தங்களை நேர்குறித்(து)
இன்று நீர்எழுந்து ஆர்த்திடும் என்றனன்,

வேறு.

8 கோசிகன் இன்னே கூறிய பின்கூ கூஎன் றே
ஆசிகள் சொன்னார் ஆடினர், ஆர்த்தார் அணிஆ டை
வீசினர் நீயே மேல்மகன் என்று மேன்மே லும்
பேசினர், பேசி மாசனர் நேசம் பெரிதுற் றார்.

9 வாரண மும்திண் தேர்பரி தேசம் வளன்எல் லாம்
ஆரணம் ஓதும் கௌசிக னுக்கா யினஎன் றே
பூரண கும்பம் வீதிகள் தோறும் பொலிவித் துத்
தோரணம் இட்டார்; தாரணி எங்கும் துறவோ ரே.

10 மென்நடை அன்னம் நல்நடை யாளை விறலா னை
முன்அடை யாநின்(று) இன்னவை பின்னும் முனிகூ றும்
என்நகர் நின்றே இவ்வுல(கு) எல்லாம் யான்ஆ ள
நின்அடை யாளம் தந்திடு மாறு நெறிஎன் றான்.

11 வாழிய நாடேர் செல்வம் அமைச்சன் மாசேனை
சூழி நெடும்கைப் போர்மத வேழம் துரகம் தேர்
ஊழியின் மட்டும் ஆளுநதி தந்தேன் உன(து)என் றே
ஆழி அளித்தான், பார்உள மட்டும் அழியா தான்.

12 குடைதந் தேன்,நீள் கொடிதந் தேன்,என் குழு ஆய
படைதந் தேன் நல் கனகத் திண்தேர் பரிதந்தேன்
தடைதந் தே(நின்று) அடியேன் ஏசத் தவனேநீ
விடைதந் தேகென்(று) அடிமேல் பரவி வீழ்வானை.

13 துணியும் தனிநெஞ்(சு) உடையான் நினது தோள்மாலை
மணியும், வளையும் வலயங் களும்நின் வடிவா ளும்,
அணியும் முடியும் சேயும் தாயும் மணியும் பொற்
பணியும் கழலும் தந்தே கென்று பலசொன் னான்.

14 எத்துக்(கு) இவைஎன்(று) அணிமா முடியும் வடிவாளு
புத்திப் புதல்வன் பூணும் பணியும் புனைமா தின் [ம்
பத்திக் கிரணப் பணியும் கனகப் பணியும் வெண்
முத்திற் பணியும் கழியா முனிவன் முனம்வைத் தான்.

15 உனையும் மடமா தினையும் அரசே! உன்மைந் தன்
தனையும் விடுதற்(கு) அணியும் பணிநீ தந்தாய் காண்,
வனையும் கழலாய்! மகனும் நீயும் மடவா ளும்
புனையும் கிரணக் கலைதந்(து) அகலப் போஎன் றான்.

16 ஆரை இரப்போம் ஆடை அளித்தால் அரனே! என்(று)
ஊரை அளித்த காவலன் நின்றே உயிர்சோ ரும்,
தாரை நினைந்தே கௌசிகன், ஆங்கு தான்மூ டும்
சீரை கிழித்தே மூவகை இட்டுச் செலஉய்த் தான்.

17 காவிச் சீரை உடுத்துக் கூறை கழித்துச் சென்(று)
ஆவிக்(கு) ஆகுலம் ஆகச்சேனை அழுங்கப் போய்ப்
பாவிக் கோசிக ஞர்முன் னுஒரு பால்வைத் துத்
தாவித் தாள்இணை பூசித் தேவிடை தாஎன் றான்.

18 தாஎன் றான்விடை தந்தேன் நீஒரு சார்பூடு
போஎன் றான்இது வேநலன் என்னுப் போவானை
வாஎன் றான்அது கேளா மீளவும் வந்(து)எய்தி
யாஎன் றான்இனி ஈகுவ எந்தாய்! யான்என் றான்.

19 செந்தேன் ஓடும் தண்பணை சூழும் திருநாடா!
வந்தே நானும் மாமுனி வோரும் வளர்வேள் விக்(கு)
உந்தே நண்ணி இரந்த பசும்பொன் உளஎல் லாம்
தந்தே போவாய் என்(று)இறை யோனைத் தடைசெய்
[தான்

உ

கபிலர் அகவல்.

யாக்கை நிலையாமை.

உலகத் தீரே! உலகத் தீரே!
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்,
மனிதர்க்கு வயது நூறல்ல(து) இல்லை.
ஐம்ப(து) இரவில் அகலும் துயிலினுல்
ஒட்டிய இளமையால் ஓர் ஐந்து நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.

அவற்றுள்;
இன்புறு நாளும் சிலவே அதாஅன்று
துன்புறு நாளும் சிலவே ஆதலால்,
பெருக்(கு)ஆ(று) ஒத்தது செல்வம், பெருக்(கு)ஆற்று
இடிகரை ஒத்தது இளமை, இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள், ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும், நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும், இன்னும்
நாளை நாளை என்பீர் ஆகில்,
நமன் உடை முறைநாள் ஆவதும் அறியீர்,
நமஉடை முறைநாள் ஆவதும் அறியீர்;
எப்போ(து) ஆயினும் கூற்றுவன் வருவான்
அப்போ(து) அந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான், பொருளொடும் போகான்;
சாற்றவும் போகான், தமரொடும் போகான்,
நல்லார் என்னான், நல்குர(வு) அறியான்,
தீயார் என்னான், செல்வர்என்(று) உன்னான்,
தரியான் ஒருகணம் தறுகண் ஆளன்,
உயிர்கொடு போவான், உடல்கொடு போகான்.
ஏதுக்(கு) அழுவீர்? ஏழை மாந்தர்காள்!
உயிரினை இழந்தோ? உடலினை இழந்தோ?
உயிர்இழந்(து) அழுதும்என்(று) ஓதுவீர் ஆகில்,
உடலினை அன்(று)அலா(து) இன்றும் காண்கிலிர்;
உயிரினை இழந்த உடல்அது தன்னைக்
களவுகொண்ட கள்வனைப் போலக்
காலும் ஆர்த்துக் கையும் ஆர்த்துக்,
கூறை களைந்து, கோவணம் கொளீஇ,

ஈமத் தீயை எரிஎழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனல் இடை மூழ்கிப்
போய்த் தமரொடும் புந்திநைந்(து) அழுவது
சலம்எனப் படுமோ சதுர்எனப் படுமோ?

... ...

திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே, ஆதலால்;
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்,
எந்நாள் ஆயினும் இரப்பவர்க்(கு) இட்டுப்
புலையும், கொலையும், களவும், தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழைஎனப் படாது
சிறப்பும் சீலமும் அல்லது,
53. பிறப்பு நலம்தருமோ? பேதை யீரே!

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

வித்துவக் கோட்டம்மான் விஷயம்

---

1 தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை.
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன்(று) இருந்தேனே.

2 மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா!என்
பால்நோக்காய் ஆகிலும்உன் பற்றல்லால் பற்றிலேன்.
தான்நோக்கா(து) எத்துயரம் செய்திடினும், தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன்(று) இருந்தேனே.

3 வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோய் ஆளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா!நீ
ஆளா உன(து)அருளே பார்ப்பன் அடியேனே.

4 செந்தழலே வந்(து)அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் செங்கதிரோற்(கு) அல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா!உன்
அந்தம்இல்சீர்க்(கு) அல்லால் அகம்குழைய மாட்டேனே.

5 எத்தனையும் வான்மறந்த காலத்தும், பைங்கூழ்கள்
மைத்(து)எழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்,
மெய்த்துயர்வீட் டாவிடினும், வித்துவக்கோட் டம்மா!என்
சித்தம்மிக உன்பாலே வைப்பன் அடியேனே.

உ

அபிராமிபட்டர் அருளிச்செய்த

அபிராமி அந்தாதி.

---

1 மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடை[மேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே.

2 மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்(கு) அழகே! அணுகாதவர்க்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே! [குப்
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

3 பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவைஒளி ஊ(று) ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீர்அடிக்கே,
சாரும் தவம்உடை யார்படை யாத தனம்இல்லையே.

4 தனம்தரு கல்வி தரும்,ஒரு நாளும் தளர்(வு)அறியா
மனம்தரு தெய்வ வடிவும் தரும்.நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்,நல்லன எல்லாம்தரும்,அன்பர் என்பவர்க்கே
கனம்தரும், பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

5 நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உன(து)என்று அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே! அருட்கட லே!இம வான்பெற்ற கோமளமே!

ஸ்ரீ குகைநமச்சிவாயதேவர் அருளிச்செய்த

அருணகிரி அந்தாதி.

1 வன்பெருக்கில் கல்மிதக்கும், வாய்முதலை பிள்ளைதரும்,
என்(பு)உருக்கொள் பெண்ணாய் இருக்குமே.-அன்பருக்
நாட்டுகுரு சோணகிரி நாதன் அடி யார்மூவர் [கு
பாட்டின் இசை கேட்ட பரம்.

2 காயம் நெகிழாமுன் கண்கள் இருளாமுன்
வாயில்உள் ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்(து)
ஓடிநமன் வாராமுன் உள்ளமே சோணகிரி
நாடிநம என்றே நட.

3 கற்றதனால் தொல்லைவினைக் கட்டறுமோ? நல்லகுலம்
பெற்றதனால் போமோ? பிறவிநோய்,—உற்றகடல்
நஞ்(சு)உகந்து கொண்டருணை நாதர்அடித் தாமரையை
நெஞ்(சு)உகந்து கொள்ளா நெறி.

4 அஞ்செழுத்தை ஓதும்அவர்க்(கு) அஞ்சி அவர் தலையில்
துஞ்செழுத்தைக் கஞ்சன் துடைக்குமே.—அஞ்சுதலைக்
ஒன்(று)அறுத்து நாலா ஒருகுறையா நின்றதலை [(கு)
இன்(று)அறுப்பான் சோணேசன் என்று.

5 உரைக்கும் அடியார் உயிர்ப்பயிர்வா டாமல்
தரைக்குள் ஆனந்தவெள்ளம் தன்னை—நிரைக்குமே.
எண்ணார் புரம்எரித்த எந்தை அருணகிரிக்
கண்ணார் அமுதமெனும் கார்.

ஆகமோத்தம் செய்யுள்; 507.

N. B. இம்முதற்பாகச் செய்யுளின் அரும்பதவுரைக் குறிப்பு முதலியன இரண்டாம்பாக முடிவில் சேர்க்கப்படும்.

லெட்சுமிராம்மாணவப்பிரசுரங்கள்

			ரூ.	அ.	பை.
*	1.	அற்புதக்கணையாழி	0	5	0
*	2.	யாக்ஞவல்கியம்	0	9	0
*	3.	கங்காபாய் ஸ்வயம்வரம்	0	4	0
*	4.	செய்யுட்பாடக்கோவை I பாகம் மிடில் ஸ்கூலுக்குற்றது	0	8	0
*	5.	ஷை II பாகம் ஹைஸ்கூலுக் குற்றது	0	10	0
*	6.	நீதிசாரத்திரட்டு I பாகம்	0	4	0
		ஷை II பாகம்	அச்சில்		
	7.	இந்திரா	,,	,,	
	8.	இந்திய பெரியார் சரிதை	,,	,,	
	9.	இந்திய பெண்மணிகள்	,,	,,	
	10.	பெரிய புராண வினாவிடை	,,	,,	
	11.	வியாசவிளக்கக்கோவை	,,	,,	
	12.	கொலைமறுக்கல் சம்பாஷணை	,,	,,	

* இவ்வடையாளமிட்டவைகள் கலாசாலைகளில் பாடபுஸ்தகமாக உபயோகிக்கக்கூடிய முறையிலேயே இயற்றப்பெற்றிருப்பதால், கலாசாலை அதிகாரிகள் ஆதரவைப்பெரிதும் எதிர்பார்த்திருக்கிறோம்.

P. N. சிதம்பரமுதலியார் & Co.

பப்ளிஷர்ஸ் & புக் ஸெல்லர்ஸ், மதுரை.

Title page only printed in Shamsia Press, Madura—1[illegible]19.